இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

# இலங்கையில் சுற்றுலாதுறை தொடர்பான தேசியக் கொள்கை

சுற்றுலாதுறை மற்றும் காணி அமைச்சு

**2024 - பெப்ரவரி**

# இலங்கையில் சுற்றுலாதுறை தொடர்பான தேசியக் கொள்கை

**சுற்றுலாதுறை மற்றும் காணி அமைச்சு**

சுற்றுலாத்துறை பிரிவு
**696/4**,மருதானை வீதி ,கொழும்பு **10**
**2024 -** பெப்ரவரி

# இலங்கையில் சுற்றுலாதுறை தொடர்பான தேசியக் கொள்கை

**பதிப்பு** : சுற்றுலாத்துறை பிரிவு
696/4,மருதானை வீதி,கொழும்பு 10
2024 - பெப்ரவரி அச்சகம்

**ISBN** :

**ஆச்சகம்** :

**இலங்கையின் சுற்றுலாதுறைந் தொடர்பான தேசியக் கொள்கை 2024 பெப்ரவரி 26 அன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அமைச்சர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.**

**(அமைச்சரவை முடிவு எண். අමප/24/0365/604/043 – 26 பெப்ரவரி 2024)**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. கொள்கைப் பெயர் | 1 |
| 2. நடைமுறைக்கு வரும் திகதி | 1 |
| 3. அறிமுகம் | 1 |
| 4. அடிப்படை | 2 |
| 5. சுற்றுலா தொடர்பான தேசியக் கொள்கையின் அவசியம் | 3 |
| 6. தேசிய சுற்றுலாக் கொள்கையின் நோக்கம் | 4 |
| 7. கொள்கை இலக்குகள் | 5 |
| 8. கொள்கை முக்கிய கருப்பொருள்கள் | 6 |
| 9. தேசிய சுற்றுலாக் கொள்கையின் கோட்பாடுகள் | 7 |
| 10. ஒவ்வொரு முக்கிய கருப்பொருளுக்குமான கொள்கை கூற்றுக்கள் | 7 |
| 10.1 ஒருங்கிணைந்த நிருவாகம் | 7 |
| 10.2 உள்ளடக்கப பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியும் | 8 |
| 10.3 மேம்படுத்தப்பட்ட சேவை தரநிலைகள், காத்திரமான இணைப்பு மற்றும் தகவலறிந்த பங்குதாரர்கள் | 8 |
| 10.4 புதிய சுற்றுலாத்தல அபிவிருத்தி, பலமான கட்டிடமைப்பும் ஊக்கத் தந்திரோபாயங்களும் | 9 |
| 11. கொள்கை அமுலாக்கம் | 9 |
| 11.1 தந்திரோபாயங்கள் | 9 |
| 11.2 பொறுப்பு மற்றும் அதிகாரம் | 9 |
| 11.3 கண்காணிப்பும் மதிப்பீடும் | 10 |

| | |
|---|---|
| இணைப்பு 1 : சொற்களஞ்சியம் | 12 |
| இணைப்பு 2 : சுருக்கெழுத்துகளின் பட்டியல் | 15 |
| இணைப்பு 3 : தொடர்புடைய கொள்கைகள் மற்றும் சட்டங்களின் பட்டியல் | 15 |
| இணைப்பு 4 : கொள்கை கருப்பொருட்களும் மூலோபாயங்களும் | 16-25 |

**01. கொள்கைப் பெயர்**

இலங்கையின் தேசிய சுற்றுலாக் கொள்கை

**02. நடைமுறைக்கு வரும் திகதி**

2024 பெப்ரவரி 26

**03. அறிமுகம்**

சுற்றுலாத்துறையானது இலங்கையின் முதன்மையான துறைகளுள் ஒன்றாகும், மேலும் இது அந்நிய செலாவணி வருமானத்தின் முக்கிய ஆதாரமாகவும் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இது ஒரு தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த தொழில்துறையாகும், இது நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை நோக்கி மாற்றுவதற்கான அதிக ஆற்றலைக் கொண்டுள்ளது. பல்வகைப்படுத்தல், புத்தாக்கங்கள் மற்றும் புதிய முதலீடுகளை உள்ளடக்கிய டிஜிட்டல் சொத்துக்களின் அடிப்படையில் வேலை உருவாக்கம், வருமானம் மற்றும் ஒட்டுமொத்த வறுமைக் குறைப்பு, நிலைபேறான சுற்றுலா வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக இலங்கைக்கு சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு தேசியக் கொள்கையொன்று அவசியமாகும்.

சுற்றுலாத்துறையானது அரசாங்க மற்றும் தனியார் துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், அனைத்து தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு இடையே தந்திரோபாய இணைப்புகளை உருவாக்கி, செயற்பாட்டினை உறுதிப்படுத்த தேசிய சுற்றுலாக் கொள்கை அவசியமானதாகும். அதற்கமைவாக, சுற்றுலா மற்றும் காணி அமைச்சு இலங்கைக்கான விரிவான தேசிய சுற்றுலாக் கொள்கையொன்றை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இந்தச் செயல்பாட்டில், உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாத் துறையின் சிக்கல்கள் மற்றும் நிலைமைகளை அடையாளம் காணவும் தேசிய சுற்றுலாக் கொள்கையின் வீச்செல்லையினை தீர்மானிக்கவும் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய கொள்கை உருவாக்க நெறிமுறையைப் பின்பற்றி, அமைச்சகங்களுக்கு இடையேயான மற்றும் மாகாண மட்டத்தில் உள்ள அரசதுறை நிறுவனங்கள், தனியார் துறை பங்குதாரர்கள் மற்றும் பொது மக்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இது சுற்றுலாத் துறையின் மேம்பாடு தொடர்பான அவர்களின் கருத்துக்களைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டவையாகும். கொள்கை உருவாக்கச் செயல்முறையின் ஒரு பகுதியாக, தேசிய சுற்றுலாக் கொள்கையைச் செயல்படுத்த ஒரு தந்திரோபாயத் திட்டம் உருவாக்கப்படும். தந்திரோபாயத் திட்டம், கொள்கைத் தலையீட்டுப் பகுதிகள், இலக்குகள், நோக்கங்கள், உத்திகள், செயல்பாடுகள், கால அளவு, வெளியீடுகள், விளைவுகள், தாக்கங்கள், KPIகள், பொறுப்புகள் மற்றும் தேசிய சுற்றுலாக் கொள்கைக்கு ஏற்புடையதான வரையறைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

சுற்றுலா அபிவிருத்தி தற்போது 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் வழிகாட்டுதல்கள், கட்டமைப்புகள் மற்றும் விதிக்கோவைகளால் நிருவகிக்கப்படுகிறது. இந்த புதிய சட்டம் சுற்றுலா அபிவிருத்தி வரியை அறிமுகப்படுத்தியது மற்றும் இலங்கை சுற்றுலா சபைக்கு பதிலாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையை (SLTDA) உருவாக்கியது. 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம், கடந்த இரண்டு தசாப்தங்களாக கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டிலும் ஆழமாக மாற்றமடைந்த துறைக்கான ஒரேயொரு சட்டரீதியான ஆவணமாக இன்றுவரை காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், சுற்றுலா தந்திரோபாயத் திட்டம் 2011-2016 ஆரம்பிக்கப்பட்டதோடு சுற்றாடல், சமூக, கலாச்சார, பொருளாதார, நிறுவன மற்றும் ஊக்குவிப்பு கூறுகளை உள்ளடக்கிய பெருந் திட்டம் மற்றும் தேசிய வளர்ச்சி நிகழ்ச்சி நிரலுடன் இணைக்கப்பட்டது.

2017-2020 ஆம் ஆண்டின் சுற்றுலா தந்திரோபாயத் திட்டம், இலங்கையின் சுற்றுலாத் தொலைநோக்கு இலக்கு 2025 இந்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது. எனினும், இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை, மேலும் தந்திரோபாயத் திட்டக் காலத்தின் முடிவில், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் அதன் பின்னரான கோவிட்-19 காரணமாக எல்லை மூடப்பட்டல் ஆகியவற்றால் இந்தத் துறை பாதிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய ஏனைய கொள்கைகள் மற்றும் சட்டங்களில் 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேசிய பாரம்பரிய வனப் பகுதி சட்டம், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம், 1980, 1983, 1992 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம், (2007 இல் முன்மொழியப்பட்டு, அமுல்படுத்தப்படாத) தேசிய கலாச்சாரக் கொள்கை 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு நாணயமாற்றுச் சட்டம், (2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம் உட்பட) இலங்கை தொழிலாளர் விதிக்கோவை, (2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் உட்பட தொடர்ச்சியாக திருத்தம் செய்யப்பட்ட, 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் 1935 மற்றும் இலங்கைக்கான தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கை (2016) ஆகியன உள்ளடங்கியுள்ளன.

## 04. அடிப்படை

**பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைபேறான அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முக்கிய பொறிமுறை வகையில் சுற்றுலா**

இலங்கைக்கு முக்கியமானதொரு பொருளாதார உந்து சக்தியாக சுற்றுலா காணப்படுகின்றது, மேலும் மிக விரைவாக முறைமை-மட்ட மாற்றத்துடன் மீண்டும் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு கடினமான மற்றும் மென்மையான உட்கட்டமைப்புகள் இரண்டிலும் பொருத்தமான தந்திரோபாய தலையீடுகள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கு இணங்க, இலங்கை சுற்றுலா மற்றும் தனியார் துறை பங்கேற்பின் வளர்ச்சியைத் தடுக்கும் கொள்கை ஒழுங்குமுறை மற்றும் நிறுவன இடைவெளிகள் மற்றும் இடையூறுகள் அடையாளம் காணப்பட்டு பொருத்தமான சீர்திருத்தங்கள் மூலம் நிவர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

சுற்றுலா என்பது ஒருங்கிணைந்த மற்றும் இணைந்த சேவை வழங்கல் செயல்பாடுகள் தேவைப்படும் ஒரு விடயமாகும். சுற்றுலா என்பது சேவைகளின் அபிவிருத்தி மற்றும் விநியோகம், பல்வேறு அமைச்சுகள், முகவரகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை நம்பியுள்ளது. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில், அரசாங்கத்தின் முதன்மைப் பங்கு ஒரு கட்டுப்பாட்டாளர், திட்டமிடுபவர், உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான உதவியாளர், தொடர்பாளர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஊக்குவிப்பாளராகும் அதே வேளையில், சுற்றுலாத்துறையை நிருவகிப்பதிலும் மேம்படுத்துவதிலும் தனியார் துறை முதன்மைப் பங்கு வகிக்கிறது.

இறுதி சுற்றுலா தந்திரோபாயத் திட்டம் (2017-2020) ஓரளவு மட்டுமே செயல்படுத்தப்பட்டது மற்றும் நிருவாக மற்றும் திட்டமிடல் துறையில் சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இத்துறையை நிருவகிப்பதற்கும், வளர்ச்சி குன்றிய நிலையினை விரைவாகக் கடப்பதற்கும் புதுப்பிக்கப்பட்ட நிறுவன, சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பின் அவசியம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

சர்வதேசரீதியாக சுற்றுலாத்துறை பெரும் பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. பருவநிலை மாற்றம் மற்றும் நிலைபேறான வளர்ச்சிப் போக்கு ஆகியவற்றின் விளைவாக சுற்றுலா ஒரு புதிய சுற்றுச்சூழல் செயற்பாடாக முன்னெடுத்துச்

செல்லப்படுகின்றது. கடந்த தசாப்தங்களில் இந்தத் துறையில் ஏற்பட்ட முக்கிய உலகளாவிய போக்குகளும் மாற்றங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

- (நிலைபேறானதன்மை மற்றும் நல்வாழ்வு, மற்றும் நிலைபேறான நுகர்வு முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது உட்பட) ˙சுற்றுலாவில் புதிய வடிவங்களை உருவாக்கி, சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்ப்புகளை மாற்றிய முன்னுதாரணங்கள்.

- தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் (உலகளாவிய சுற்றுலா பெறுமானத் தொடரின் முன்னுதாரண மாற்றம் மற்றும் இயங்குதள பொருளாதாரத்தில் அதிகரித்து வரும் செயற்பாடுகள்).

- சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாவின் தொடர்ச்சியான வளர்ச்சியால் ஏற்படும் எதிர்மறையான புறநிலைகள் (உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் ஒரே தளத்தில் கலப்பதால் ஏற்படும் சிக்கல்கள், வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் குறைந்த அளவிலான சுற்றுச்சூழல் பாதுகாப்புகள்).

இந்த போக்குகள் பொதுவாக பல்வேறு இயற்கைக் காட்சிகள், கலாச்சார பாரம்பரியம் மற்றும் உன்னதமான சுற்றுலா அனுபவங்கள் என்பன இலங்கையின் சுற்றுலா வளர்ச்சிக்கு சாதகமாக உள்ளன. இருப்பினும், விமானப் பயணத்தின் மீது அதிகம் தங்கி இருத்தல், பசுமையான இடமாக நோக்கப்படும் நாட்டின் கருத்தைப் பாதிக்கலாம். சுற்றுச்சூழல், சமூகம், கலாச்சாரம், நெறிமுறை பொறுப்பு மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான ஒரு நிலைபேறான மற்றும் நெகிழ்ச்சியான சுற்றுலாத் துறையானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மற்றும் கலாச்சார மறுமலர்ச்சி போன்ற பொருளாதார மற்றும் பொருளாதாரம் அல்லாத மகத்தான நன்மைகளை பெற்றுத்தரும்.

சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகத் தெரிந்தாலும், இயற்கை வளங்களின் காத்திரமான பயன்பாடு மற்றும் உள்ளூர் சமூகங்களின் சமமான ஈடுபாடு ஆகியவை சுற்றுலாவில் தனித்துவமான அனுபவத்தைத் தேடும் உயர்தர சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையை கவர்ச்சிகரமான இடமாக மாற்றும். இதற்கு அனைத்து பங்குதாரர்களுக்கும் சமமான பலன்களை உறுதி செய்யும் சுற்றுலா வளர்ச்சியில் துறைசார்ந்த ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

கோவிட்-19 தொற்றுநோயால் சர்வதேச சுற்றுலா மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. நீண்ட காலப் போக்குகளில் நீண்ட தூரப் பணியாளர்களுக்கான நீண்ட கால விசாக்கள், உள்நாட்டு மற்றும் பிராந்திய பயணங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் மற்றும் சிறிய குழு, வெகுஜன சுற்றுலாவைத் பின்பற்றுதல் ஆகியவை அடங்கும். இறுதியாக, சுகாதார நெருக்கடி ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு, சுற்றுலாப் பொருளாதாரத்தின் முறையான செயல்பாட்டாளர்களைப் பாதுகாக்கும், உள்ளூர் முறைசாரா செயற்பாட்டாளர்களை சேர்ப்பதை ஊக்குவிக்கும் மற்றும் வெளிநாட்டு / சர்வதேச முறைசாரா செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்பை உறுதி செய்யும் சட்டக் கட்டமைப்பு தேவைப்படுகிறது.

**05. சுற்றுலா தொடர்பான தேசியக் கொள்கையின் அவசியம்.**

இலங்கையின் பொருளாதாரத்தில் அந்நிய செலாவணி வருமானத்தின் அடிப்படையில் சுற்றுலாத்துறை ஒரு முக்கிய தூணாக காணப்படுகின்றது. இலங்கையில் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கான பிரதான தடைகள் நிறுவனங்களுக்கிடையிலான முறையற்ற ஒருங்கிணைப்பும் திறமையற்ற நிருவாகமாகும். மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில் தரங்களின் தேவை, போதிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், பலவீனமான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு, சந்தை தகவல்களுக்கான வரம்புக்குட்பட்ட அணுகல் மற்றும் கவனம் செலுத்திய

மற்றும் ஒருங்கிணைந்த இலக்கு விளம்பரங்களின் பற்றாக்குறை ஆகியவை இவற்றைச் சேர்க்கின்றன.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் (2019) மற்றும் 2022 இன் பொருளாதார நெருக்கடிகள் போன்ற உள்நாட்டு சவால்களை மாற்றியமைக்க வேண்டும். கோவிட்-19 இலிருந்து மீள்வது மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது போன்ற வெளிப்புற சவால்களை சர்வதேச சுற்றுலாத்துறையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். இது காலப்போக்கில் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்தும், குறிப்பாக இலங்கையின் இலக்குகளை பாதிக்கும். இது தவிர, பொது மற்றும் தனியார் செயற்பாட்டாளர்களால் இலக்கினுள் பல சவால்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இலங்கையின் சுற்றுலாத் துறையானது, மேற்கூறிய பிரச்சினைகளை சமாளிக்கவும், உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையடையவும் வலுவாக ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

சுற்றுலாத் துறையானது பல்வேறு நிலைகளில் பல்வேறு துறைகளுடனான தொடர்பினைக் கொண்டிருப்பதால், தேசிய சுற்றுலாக் கொள்கையானது ஒத்திசைவான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தொடர்புடைய துறைசார் கொள்கைகளுடன் இணைந்திருப்பது காலத்தின் தேவையாகும். அரசாங்கம் மற்றும் உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான சுற்றுலாக் கொள்கையானது நாட்டின் நிலைபேறான மற்றும் உள்ளார்நத வளர்ச்சியை உறுதி செய்யும்.

**6. தேசிய சுற்றுலாக் கொள்கையின் நோக்கம்**

தேசியக் கொள்கைக் கட்டமைப்பில் சுற்றுலா பற்றிய பல குறிப்புகள் உள்ளடங்கலாக, நாட்டின் துரிதமானதும் நிலைபேறானதுமான அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக சுற்றுலாதுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இந்தத் துறையின் வளர்ச்சி மற்றும் நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு இடமுள்ளது. இது சம்பந்தமாக, தேசிய அளவில் இத்துறையின் வாய்ப்புகள் மற்றும் வரையறைகள் மற்றும் சர்வதேச சூழலில் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் பற்றிய மதிப்பீடு, இத்துறையில் நிலவும் நிலைமைகள் பற்றிய தெளிவான புரிதலை வழங்கும்.

இத் துறையின் அடிப்படை வரையறைகள் அல்லது பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஆறு முக்கிய தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.

01. பலவீனமான நிருவாகம் (சுற்றுலா தொடர்பான திட்டமிடல், முகாமைத்துவம் மற்றும் கொள்கை உருவாக்கம், குறைந்த அளவிலான பாதுகாப்பு மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான பாதுகாப்பு).

02. அழிந்து வரும் சுற்றுலா சொத்துக்கள் (இயற்கை வளங்களின் சுற்றுலா போட்டித்தன்மை குறியீட்டு தரவரிசை - உலக பொருளாதார மன்றத்தால் தயாரிக்கப்பட்டது).

03. வரையறுக்கப்பட்ட வகையிலமைந்த சந்தை வாய்ப்பு (குறிப்பிட்ட சந்தை தொடர்பான தகவலகள் குறைவாகக் காணப்படல், அதிக சந்தைவாய்ப்புக்களைப் பெறுவதில் காணப்படும் வரையறைகள்).

04. வரையறுக்கப்பட்ட முதலீடுகள் (வரையறுக்கப்பட்ட சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் பல்வகைப்படுத்தல் இல்லாமை, சுற்றுலா வலயங்கள் குறித்த தெளிவின்மை, சுற்றுலாவுடன் தொடர்புடைய சிறிய அளவிலான முதலீட்டு ஊக்குவிப்புத் தொகைகள் மற்றும் நில உரிமைகளைப் பெறுவதில் காணப்படும் சிக்கல்கள்).

05. கிடைக்காத மற்றும் வரையறுக்கப்பட்ட திறன்கள் (அதிகமாக மையப்படுத்தப்பட்ட சுற்றுலாக் கல்வி மற்றும் பாடத்திட்டத்தில் உள்ள வேறுபாடுகள்).

06. போதிய அளவில் தொடர்புகள் இல்லாமை (மிகவும் முக்கியமான இடங்களிலிருந்து நேரடி சர்வதேச விமானங்கள் இல்லாமை, சந்தைகளை உருவாக்குதல், மோசமான வீதி வலையமைப்பு மற்றும் உள்ளகத் தொடர்பு, நவீனமயமான தன்னாட்சி அமைப்புகள் இல்லாமை).

இந்த பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிகளாக இலங்கையில் தனித்துவமான அமைவிடம் (ஐரோப்பா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையில் அமைந்திருத்தல்) மற்றும் புதிய தயாரிப்பு அபிவிருத்திக்கான வாய்ப்புகள் (தொற்றுநோய்க்கு பிந்தைய வாய்ப்பாக ஆரோக்கியமான சுற்றுலா) ஆகியவற்றால் தற்போதுள்ள வாய்ப்புகளுடன் ஒத்துப்போகின்றன. மேலும், வளர்ந்து வரும் சர்வதேச போக்குகள் (சுற்றுலா, அறிவைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளடங்கலாக) சுற்றுலாத்தல திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் திறம்பட இணைக்கப்பட முடியும்.

ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த கொள்கைகள் / தந்திரோபாயங்களை கருத்திற் கொள்ள வேண்டும், சுற்றுலாவிற்கான சொத்துக்களின் பலம், சுற்றுலாத் தலங்களின் பிரபல்யம் மற்றும் சர்வதேச சுற்றுலாத் துறைக்கு குறிப்பாகக் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் மற்றும் பொதுவாக இது தொடர்பில் இலங்கை எந்த செல்வாக்கையும் கொண்டிருக்க முடியாது. இவற்றுள் சில சுற்றுலாத்துறையின் எதிர்கால வளர்ச்சியின் நிலைபேறான தன்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம்.

இலங்கை, கலாச்சார மற்றும் இயற்கைப் பாரம்பரியத்தின் செழுமையிலும் பன்முகத்தன்மையிலும் (எட்டு யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்கள்), உயிர்பல்வகைமையிலும் (உயிர்பல்வகைமை பெருக்கத்திற்கான 36 உலகளாவிய முக்கிய இடங்களுள் ஒன்று) மற்றும் 1,585 கி.மீ. கரையோரப் பிரதேசம் ஆகியவற்றில் தங்கியுள்ளது. ஒரு சுற்றுலாத்தலம் என்ற வகையில் இலங்கையின் அழகு இந்த தனித்துவமான பாரம்பரியத்தில் மட்டுமல்லாது, இந்தியப் பெருங்கடலின் முக்கிய வான் மற்றும் கடல் பாதைகளின் மையத்தில் அதன் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடத்திலும் அமைந்துள்ளது. உலகளாவிய பொருள் பரிமாற்ற மையமாக நாட்டின் இவ் வமைவிடம் காணப்படுவதால் நாட்டுக்கு நன்மைபயக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்திய துணைக்கண்டத்தில் 3 பில்லியனுக்கும் அதிகமான மக்களின் வீட்டு வாசப்படியாகக இலங்கை உள்ளது, இதனுடன் உயர்தர பயண அனுபவத்தை எதிர்பார்க்கும் நடுத்தர வர்க்க சந்தையொன்றும் வளர்ந்து வருகிறது.

சுற்றுலாதுறை வளர்ச்சி அடைவதைத் தடுக்கும் அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பது சிறந்த கொள்கையினை உருவாக்குவதற்கு வழிகாட்டும். இயற்கை சூழல் மற்றும் வளங்கள் இலங்கையின் முக்கிய கவரும் சக்திகளாகக் காணப்பட்டாலும், அவை உள்ளக (உயிர்பல்வகைமை பெருக்கத்தை தடுக்கும் மோசமான திட்டமிடல்) மற்றும் வெளிப்புற (காலநிலை மாற்றம்) ஆகிய அச்சுறுத்தல்களிலிருந்து விடுபட முடியாமல் உள்ளது. சுற்றுலாதுறையில் ஆற்றலை உணர்ந்துகொள்வதற்கு தகுதியான பணியாளர்கள் தேவை, எனினும் இலங்கையின் விருந்தோம்பல் துறையானது தற்போது திறமையான பணியாளர்களுள், குறிப்பாக பெண்கள் மத்தியில் குறைந்த ஆர்வமே காணப்படுகின்றது. ஒரு தொழிலாக சுற்றுலா செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இளைஞர்களிடையே ஆர்வமின்மை, மிகவும் இறுக்கமான தொழிலாளர் சட்டங்களுடன் இணைந்ததான, கடினமான தொழில்சார் சூழலும் இதற்குக் காரணமாகும். சுற்றுலாதுறையினை வளப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சூழலை வழங்க வேண்டிய நிருவாகமானது ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள், கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற அண்மைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு, அரசியல் ஸ்திரமின்மை, குறைந்த அளவிலான பாதுகாப்பு ஆகியவற்றால் சூழ்நந்துக்கொண்டிருக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களுக்கு எதிர்கொள்ளும் வகையில், சுற்றுலாவுக்கான தேசிய சுற்றுலாக் கொள்கையானது, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள அனைத்து முக்கிய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களின்

உயர் பங்கேற்பு செயல்முறையின் மூலம் உருவாக்கப்பட்டது. கொள்கை அபிவிருத்தி செயல்முறையில் பாரதூரமான பிரச்சினைகள், கவனிக்கப்படாமல் விடப்பட்டால், அவை இலங்கை அதன் பொருளாதார இலக்குகளை அடைவதைத் தடுக்கும் என்பதோடு, நாட்டின் கலாச்சார மற்றும் இயற்கை ஆரோக்கியத்தின் மீது நீடித்த எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## 7. கொள்கை இலக்குகள்

இலங்கையை “மறக்கமுடியாத, உண்மையான மற்றும் பலதரப்பட்ட அனுபவங்களைக் கொண்ட உலகின் தலைசிறந்த தீவாக மாற்றும் தொலைநோக்குப் பார்வையுடன், இக் கொள்கையானது முதல் ஐந்து ஆண்டுகளில் பின்வரும் இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். மாறிவரும் சமூகப் பொருளாதார அமைப்பு மற்றும் மாறும் தொழில் போக்குகளைக் கருத்திற் கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலக்குகள் மாற்றியமைக்கப்படும் மேலும், கொள்கை இலக்குகள், உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நாட்டின் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியினை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகின்றது.

01. SDG (நிலைபேறான அபிவிருத்து இலக்கு) களை அடைவதற்கு, சமநிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வதற்கு, சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீட்டாளர்கள் வருகை தருவதை ஊக்குவிப்பதற்கு நிலைபேறான, காலநிலை மற்றும் சமூக-பொருளாதார வலிமையுடன்கூடிய சுற்றுலா அபிவிருத்தி.

02. தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களுக்கிடையில் மற்றும் பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுக்கு இடையில் முன்னேற்றகரமான ஒருங்கிணைப்பு, இணைப்பு, நல்லிணக்க அத்துடன் / அல்லது ஒத்துழைப்பு மூலம் துறையின் காத்திரமான நிருவாகம்.

03. உள்ளூர் வளங்கள், அறிவு, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் பாதுகாப்பதன் மூலமும் நாட்டின் அனைத்து பங்குதாரர்கள் மற்றும் குடிமக்களுக்கு நன்மைகளை வழங்கும் மக்களை மையமாகக் கொண்ட தொழில்.

04. அனைத்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செயற்பாட்டாளர்களும் முறைப்படுத்தப்பட்ட / பதிவுசெய்யப்பட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்ததல் மற்றும் சட்டத்திற்கு அமைவாக செயல்பாட்டு அம்சங்கள் மற்றும் சுற்றுலா வருமானங்களில் பொறுப்பு மற்றும் வெளிப்படைதத்தன்மை என்பதை காணப்படுகின்றது என்பதையும் உறுதி செய்வதன் மூலம் மேம்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல்.

05. சுற்றுலா தொழில்முனைவு, புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிக்கும் ஒரு தொழில், மிகச் சிறிய, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய வர்த்தகங்கள் மற்றும் புதிய சுற்றுலா தலங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான ஊக்குவிப்பு / வாய்ப்புகள்.

06. புதிய உள்நாட்டு சந்தைகள் / தயாரிப்புகளை உருவாக்குதல் மற்றும் பொறுப்பான உள்நாட்டு சுற்றுலாவை தந்திரோபாய ரீதியாக மேம்படுத்துதல்.

## 8. கொள்கை முக்கிய கருப்பொருள்கள்

நாட்டின் சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக கூட்டுறவு மற்றும் போட்டித் தன்மையுடனான கூட்டுச் செயற்பாட்டின் உண்மையான உணர்வுடன் ஏனைய வரிசை அமைச்சுக்கள், மாகாண அரசுகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுடன் இணைந்து சுற்றுலா அமைச்சின் ஈடுபாட்டுடன் விரிவான கொள்கை கட்டமைப்பொன்று வகுக்கப்பட்டுள்ளது. நாட்டின் சுற்றுலாத் துறையின் வெற்றிக்கு தொழில்துறை பங்குதாரர்களுடன் கூட்டுச் சேர்ந்த ஒரு முழு அளவிலான அரசாங்க

அணுகுமுறை முக்கியமானதாகும். மேற்படி ஆறு கொள்கை இலக்குகள் பின்வரும் நான்கு கொள்கை கருப்பொருள்கள் மற்றும் தொடர்புடைய தந்திரோபாயங்களுடன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1 - கொள்கை கருப்பொருள்கள் மற்றும் தொடர்புடைய தந்திரோபாயத் தொகுப்பு (உருமாற்றத்தின் மாற்ற இயக்கிகள்)

| **ஒருங்கிணைந்த நிருவாகம்** | **உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியும்** | **மேம்படுத்தப்பட்ட சேவை தரநிலைகள், காத்திரமான இணைப்பு மற்றும் தகவலறிந்த பங்குதாரர்கள்** | **புதிய சுற்றுலாத்தல மேம்பாடு, வசதியான கட்டடங்கள் மற்றும் ஊக்கமளித்தல் உத்திகள்** |
|---|---|---|---|
| - துறையின் பெரும்பாக ஆளுகையில் சீர்திருத்தம்<br><br>- துறையின் உப தேசிய நிருவாகத்தை மறுசீரமைத்தல்<br><br>- பாரா-பொது மக்கள் நிறுவனங்களை காத்திரமான மற்றும் பொருத்தமானதாக வகையில் மறுசீரமைத்தல்<br><br>- நெருக்கடி முகாமைத்துவ அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்துதல்.<br><br>- தனியார் துறை பிரதிநிதித்துவத்தினையும் துறையில் அதன் பங்கினையும் மறுசீரமைத்தல் | - நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சுற்றுலாவுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை ஒத்திசைவானதாக்குதல்<br><br>- இயற்கையான, கலாச்சார மற்றும் ஏனைய சுற்றுலா சொத்துக்களின் நிலைபேறான பயன்பாடும் பாதுகாப்பும்<br><br>- மக்களை மையமாகக் கொண்ட, உள்ளூர் வள அடிப்படையிலான மேம்பாட்டிற்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு வழிகாட்டும் தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை உருவாக்குதல், சுற்றுலா நன்மைகளின் நியாயமான விநியோகத்திற்காக மதிப்பினை அதிகரித்தல்<br><br>- நிலைபேறான தன்மை சான்றுப்படுத்தலுக்காக ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் உலகளவில் | - தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல் முகாமைத்துவ செயல்முறைக்கான அணுகலை மேம்படுத்துதல்<br><br>- சுற்றுலா அபிவிருத்திக்கான தேசிய உத்திகளின் மீளாய்வு<br><br>- சந்தைப்படுத்தல் தத்துவத்தை மீள் உத்தியாக மாற்றுதல்<br><br>- நவீன தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுலாத் துறையின் இணைப்பை மேம்படுத்துதல்.<br><br>- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுலா தலம் சார்ந்த திறன்களை மேம்படுத்துதல் | - இலங்கையில் இயற்கை மற்றும் சமூக கலாச்சார பாரம்பரியத்தை ஈர்ப்பதன் மூலம் புதிய சுற்றுலா தலங்கள் மற்றும் தயாரிப்புகளை அபிவிருத்தி செய்தல்.<br><br>- வர்த்தக சூழலின் போட்டி நிலையை மேம்படுத்துதல்<br><br>- நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலா வளர்ச்சிக்கான ஊக்கம்.<br><br>- பார்வையாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் உட்பட பார்வையாளர் அனுபவத்தை மாற்றுதல்.<br><br>- சந்தை நுண்ணறிவு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளை உருவாக்குதல்<br><br>- சுற்றுலா முதலீடு மற்றும் அபிவிருத்திக்கான சாதகமான வர்த்தக சூழலை உறுதி செய்தல். | | |

இந்தக் கொள்கையானது சுற்றுலாத் துறையில் மூலோபாய மாற்றத்திற்கான பல வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிருவாகத்தில் அதிகரித்த செயல்திறன், போட்டித் தன்மையுடனான ஊதியங்கள், புதிய ஊக்குவிப்பு உத்திகள், புதிய சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் சந்தைகள், காலநிலை மற்றும் இயற்கைசார்ந்த கரிசனை மேம்பாடு, அதிகரித்த இணைப்பு மற்றும் மிகவும் பயனுள்ள அமைப்பு மற்றும் தனியார் துறையின் வெளிப்படையான பங்கேற்பு ஆகியவை இதில் அடங்கும். இது ஒரு சுற்றுலாத் தலமாக இலங்கையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதோடு, அதன் கலாச்சார மற்றும் இயற்கை விழுமியங்களையும் பாதுகாக்கும்.

இந்தக் கொள்கையானது, இலங்கையில் தொடர்புடைய ஏனைய தேசியத் துறைக் கொள்கைகளுடன் சீரமைப்பதற்குத் தேவையான வழிப்படுத்தல்களையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது, துறைசார் முன்னுரிமைகள் மற்றும் சுற்றுலாவை சீரமைக்க வேண்டிய கொள்கைகள் பற்றிய பரிந்துரைகளையும் வழங்குகிறது.

## 9. தேசிய சுற்றுலாக் கொள்கையின் கோட்பாடுகள்

சுற்றுலாக் கொள்கையானது தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு இடையே இலங்கையின் தனித்துவமான சுற்றுச்சூழல், காலநிலை, சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார விழுமியங்களில் ஒரு சரியான சமநிலையை பேணுவதை உறுதி செய்வதே முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இலங்கையின் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் கொள்கைக் கோட்பாடுகளுக்கு இணங்குவது மிகவும் முக்கியமானது மற்றும் அது கொள்கையின் நிலைபேறானதன்மையை அடைவதற்கும் உதவும். இலங்கை வெப்பமண்டல காலநிலை முறைகளுக்கு உட்பட்டு வளர்ந்து வரும் தீவு நாடாக இருப்பதால், காலநிலை மாற்ற தாக்கங்களுக்கு மிகவும் இலகுவாகப் பாதிக்கப்படக்கூடியதாகக் காணப்படுகின்றது. எனவே, சுற்றுலாத் துறையும் அதே கொள்கைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதகமான பாதிப்பைக் குறைப்பதற்கும், நிலைபேறன கழிவு முகாமைத்துவம் தொடர்பில் குறிப்பிட்ட கவனம் செலுத்துவதற்கும் வழிகாட்டதல் வேண்டும்.

## 10. ஒவ்வொரு முக்கிய கருப்பொருளுக்குமான கொள்கை கூற்றுக்கள்

கொள்கை இடையீட்டின் மூலோபாய பகுதிகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட பின்வரும் கொள்கை அறிக்கைகள் மூலம் தூரநோக்கு மற்றும் இலக்குகளை அடைய சுற்றுலா கொள்கை முயல்கிறது. சுற்றுலா தொடர்பான நிரம்பலில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் உள்ளடக்கப் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கான சுற்றுலாப் பொருட்களுக்கான கேள்வி ஆகிய இரண்டையும் இந்தக் கொள்கை குறிப்பிடுகிறது.

### 10.1 - ஒருங்கிணைந்த நிருவாகம்

ஒருங்கிணைந்த தேசிய சுற்றுலா கொள்கை நடவடிக்கைகள் மூலம் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி உறுதி செய்யப்பட வேண்டும். இதற்கு நிறுவனரீதியான சீர்திருத்தங்கள், தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தின் பங்கேற்பு ஆகியவற்றின் உதவியுடனான செங்குத்து மற்றும் கிடைமட்ட கொள்கை ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது, மேலும் திறன் மதிப்பீடுகள், மதிப்பு சங்கிலி பகுப்பாய்வு மற்றும் பாலினம் மற்றும் உள்ளடக்க ஆய்வுகள் போன்றவற்றின் மூலம் உள்ளூர் திட்டமிடல் தொடர்பான அமைப்புகளை கருத்தில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

| கொள்கை அறிக்கை : |
|---|
| **போட்டித் தன்மையுடனான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் மறக்கமுடியாத சுற்றுலா அனுபவங்களை வழங்குவதற்காக சுற்றுலா அபிவிருத்தியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிருவாக திறனை உறுதி செய்வதில் உள்ளக-அரசுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படும்.** |

### 10.2 - உள்ளடக்கப பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியும்

தேசிய சுற்றுலாக் கொள்கையானது, சுற்றுலாத் தலங்களின் நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்புள் மிகவும் விரிவாக இத்துறையில் பின்பற்றப்பட வேண்டும் என்பதை சிபார்சு செய்கின்றது. இயற்கை, கலாசார, மற்றும் சுற்றாடல் வளங்களைப் பாதுகாப்பதற்கு நிலைபேறான சுற்றுலா இன்றியமையாததாகும், இவை அனைத்தும் இலங்கையின் சுற்றுலாத் துறையின் நீண்டகால நிலைத்த தன்மைக்கு இன்றியமையாதவையாகும். இது தவிர, புதிய சுற்றுலாத் திட்டங்கள் நிலைபேறான தரங்களைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த புதிய அளவுகோல்கள் உருவாக்கப்பட வேண்டும், அதாவது, மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி, மீள்சுழற்சி மற்றும் பூஜ்ஜிய ஒற்றை உபயோக பிளாஸ்டிக்குகள் அதில் அடங்கும். பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் முறைசாரா தொழிலாளர்களை மதிப்புச் சங்கிலியின் அடிப்பகுதியில் சேர்ப்பது அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கும், ஏழைகள் மற்றும் விளிம்புநிலை சமூகங்களுக்கு நன்மைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் அடிப்படையாக இருக்கும். இதன் விளைவாக, 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இது நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| கொள்கை அறிக்கை : |
|---|
| **பொருத்தமான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலங்கையின் சுற்றுலாத் துறையின் நிலைபேறான வளர்ச்சிக்கான தரப்படுத்தலை வழங்குகின்றன, அவை உள்ளடக்க வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், பொறுப்பான நுகர்வு மற்றும் நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும், வளர்ந்து வரும் சந்தைக்கு ஏற்றவாறு உயர் மதிப்பு மற்றும் புதுமையான சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஊக்குவிப்பதில் சுற்றுலாத்துறையின் வகிபாகத்தை அறியும் அதிநவீனத்தன்மையுடன், நாட்டின் செழிப்பை உறுதி செய்கின்றது.** |

### 10.3 - மேம்படுத்தப்பட்ட சேவை தரநிலைகள், காத்திரமான இணைப்பு மற்றும் தகவலறிந்த பங்குதாரர்கள்

டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் சான்று அடிப்படையிலான ஆராய்ச்சியின் உதவியுடன் இலங்கையின் சுற்றுலா பன்முகப்படுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமாக, இந்தத் துறையின் வளர்ச்சியைத் திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் தரவுகளும் தகவல்களும் முக்கியமானவையாகும். மேம்படுத்தப்பட்ட சுற்றுலா முகாமைத்துவத்திற்கு சுற்றுலா தொடர்பான துறைகளை அளவிடுவதற்கான சிறந்த அமைப்பு தேவைப்படுகிறது. தற்போதைய

நடைமுறைகளில் சீர்திருத்தம், மீளாய்வு மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை சுற்றுலாத் தலங்களின் மேம்பட்ட போட்டித்தன்மைக்கான வசதியினை ஏற்படுத்தும்.

டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் புதுமை ஆகியவை சுற்றுலாத் துறையில் பரந்த அளவில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இணைய பயன்பாடுகள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற நவீன தொழில்நுட்பத்தின் மூலம் அதன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மற்றும் பன்முகத்தன்மை கொண்ட சுற்றுலாவினை ஊக்குவிக்க வேண்டும், இது பொருளாதாரத்தில் இணைய பயன்பாட்டின் முக்கிய உந்து சக்திகளில் ஒன்றாக காணப்படுகின்றது. புதிய தயாரிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் சுற்றுலாவில் ICT இன் புதிய பயன்பாட்டை ஊக்குவித்துள்ளன. இவை காலப்போக்கில் தொழில்துறையின் முக்கிய போக்குகள் பற்றிய ஆதாரங்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| கொள்கை அறிக்கை : |
|---|
| **இலங்கை சுற்றுலாவின் டிஜிட்டல் மாற்றத்தை உறுதிசெய்வதன் மூலம், சுற்றுலா பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் தொழில்துறையின் கண்டுபிடிப்பு திறனை விரிவுபடுத்துதல், திறந்த புதிதான உட்கட்டமைப்பு அல்லது உள்ளூர் புதுமைகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளை எளிதாக்குதலும் முதலீடுகளை ஊக்குவித்தலும்** |

## 10.4 - புதிய சுற்றுலாத்தல அபிவிருத்தி, பலமான கட்டிடமைப்பும் ஊக்கத் தந்திரோபாயங்களும்

(சந்தை சூழலின் மறுசீரமைப்பும் சீர்திருத்தமும்)

பாரம்பரியம், கலாச்சாரம், அழகியல் மற்றும் சமூக விழுமியங்கள் ஆகியன ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான முக்கிய காரணிகளாகும். மேலும், இந்தக் காரணிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதாரத்திற்கும், சமூக அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றன. அதற்கமைவாக, இலங்கையின் தனித்துவமான கலாசாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தை ஊக்குவித்து அதன் பெறுமதியினை அதிகரிப்பதன் மூலம் சுற்றுலாத்துறையை பல்வகைமைப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக வளர்ந்து வரும் உலகளாவிய சுற்றுலாத் தேவையை மூலதனமாக்குவது மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட பயணத்தின் தேவைகளை ஒரு முக்கிய மற்றும் சிறந்த பயண வடிவமாகப் பூர்த்தி செய்வது, சுற்றுலாப் பயணிகளை பல இடங்களில் தங்குவதற்கும் அதிகமாகச் செலவிடச் செய்வதற்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இது சம்பந்தமாக, நிரம்பல் மற்றும் கேள்வி ஆகிய இரண்டிலிருந்தும் துறையின் வளர்ச்சியை எளிதாக்குவது, அத்துடன் சுற்றுலாவின் துணைப் பிரிவுகள் நன்கு ஒழுங்குபடுத்தப்படுவதை உறுதிப்படுத்த சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பை உருவாக்குதல், இலங்கையில் சுற்றுலாவின் நிலைபேறன அபிவிருத்திக்கு வர்த்தக முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய இரண்டிலும் தொடர்ச்சியான நிதி ஆதரவைப் பெறுவது அவசியம்.

| கொள்கை அறிக்கை : |
|---|
| **சந்தை சூழலை சீர்திருத்துவதன் ஊடாக, பிரத்தியேகப்படுத்தப்பட்ட மற்றும் விவேகமான பயணங்களின் ஆதரவுடன் சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்தி, தொழில்துறையின் திறனைக் கட்டியெழுப்புவதை உறுதிப்படுத்துவதன் மூலம், அதிகரித்துவரும் சுற்றுலாத் கேள்வி நுட்பத்துடன் இலங்கை சுற்றுலாவின் சரியான நிலைப்பாட்டை உறுதிப்படுத்துதல்.** |

## 11. கொள்கை அமுலாக்கம்

### 11.1 - தந்திரோபாயங்கள்

இந்தக் கொள்கையானது குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கென நீண்ட காலக் கண்ணோட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளதோடு இறுதி இலக்கினை அடைவதற்கு குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தந்திரோபாயத் தொகுப்பும் உருவாக்கப்படும். கொள்கை இலக்குகளை அடைய 3-5 ஆண்டுகளுக்கு ஒரு இடைக்கால மூலோபாயத் திட்டம் மற்றும் செயல்பாடுகளால் பின்பற்றப்படும் தந்திரோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். கொள்கையின் நீண்டகால போக்கினைப் அனுசரித்து உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மூலோபாயத் திட்டம் அவ்வப்போது திருத்தப்படும்.

### 11.2 - பொறுப்பு மற்றும் அதிகாரம்.

வரிசை சுற்றுலா அமைச்சு கொள்கை அமுலாக்கத்தின் முக்கிய பொறுப்பையும் அதிகாரத்தையும் கொண்டது. இடைக்கால மூலோபாய திட்டத்தின் மூலம் கொள்கை அமுலாக்கம் தொடர்பான பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வரிசை அமைச்சின் கீழ் இயங்கும் நான்கு தனித்தனி சுற்றுலா நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA), இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB), இலங்கை மாநாட்டு பணியகம். (SLCB), மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM). அதேபோன்று, மத்திய அரசு மட்டம், மாகாண மட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் உள்ள ஏனைய தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் முகவர் நிலையங்கள் கொள்கை இலக்குகளை அடைவதற்காக பொறுப்புகளை ஏற்றுள்ளன. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பொறுப்பான முன்னணி மற்றும் உதவி நிறுவனங்களை மூலோபாயத் திட்டம் அடையாளம் காட்டுகிறது.

### 11.3 - கண்காணிப்பும் மதிப்பீடும்

கொள்கையை மதிப்பீடு செய்வதற்குப் பொருத்தமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் திட்டங்கள் அவசியமானவையாகும். சுற்றுலா விடயத்திற்குப் பொறுப்பான வரிசை அமைச்சு கொள்கை அமுலாக்கத்தின் பொறுப்பையும் அதிகாரத்தையும் கொண்டிருப்பதால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னா் கொள்கையின் செயல்திறனை மதிப்பீடு செய்வதும், தேவைப்பட்டால் கொள்கையில் பொருத்தமான திருத்தங்களைச் செய்வதும் அதன் பொறுப்பாகும். தொடர்புடைய முக்கிய அமைச்சுக்கள் / முகவரகங்கள் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு வழிநடத்தல் குழு, கொள்கையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ள சுதந்திரமாக செயல்படும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சுற்றுலாத்துறை முழுவதும் கொள்கை அமுலாக்கத்தின் திறன் மற்றும் செயல்திறனை அளவிடுவதற்கு ஒரு இணைக் குழு மூலம் உள்ளகக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அமைப்புகளும் இருக்க வேண்டும். சுற்றுலாக் கொள்கையின் செயல்திறன் மற்றும் உண்மையான அமுலாக்கத்தை அளவிடுவதற்கு பொருத்தமான குறிகாட்டிகளும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**இணைப்பு 1 : சொற்களஞ்சியம்**

இந்தக் கொள்கை ஆவணத்தைப் பயன்படுத்துபவர்கள் இந்தக் கொள்கை உருவாக்கப்பட்ட சூழலில் சில சொற்களைப் பற்றி நியாயமான புரிதலைப் பெற உதவுவதே இந்த சொற்களஞ்சியத்தின் நோக்கமாகும். வெவ்வேறு சூழல்களிலும் நிலைகளிலும் இத்தகைய சொற்களின் விளக்கம் வேறுபட்டதாக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**பகுதி அ :**

**கொள்கை இலக்குகள்**: அடிப்படைக் கொள்கைக் கோட்பாடுகள் தொடர்பில் - ஒரு கொள்கைக்கு ''இலக்குகள்'' உள்ளன. இந்த இலக்குகள் விரும்பப்படும் விளைவுகளின் எல்லையினை விவரிக்கின்றன அல்லது கொள்கையைச் செயல்படுத்துவதன் மூலம் எதை அடைய வேண்டும் என்பதை விபரிக்கின்றன. ஒரு கொள்கையின் இலக்கு என்பது நோக்கத்தை வழிநடத்தும் செயற்பாடுகளின் விரிவான கூற்றாகும்.

**கொள்கையின் நோக்கங்கள்:** இலக்குகளும் நோக்கங்களும் ஒன்றல்ல. ''அளவீடு செய்யப்படக்கூடிய தன்மை'' என்பது எப்போதுமே குறிக்கோள்களை அமைப்பதில் ஒரு முக்கியமான கொள்கையாகக் கருதப்படுகிறது. குறிக்கோள்கள் பொதுவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ''செயல்பாட்டு அலகுகளுடன்'' இணைக்கப்படும் மற்றும் பொதுவாக அவை ''குறுகிய கால''த்தைக் கொண்டதாக இருக்கும். அளவிடக்கூடிய குறிக்கோள்கள் இல்லாத ஒரு கொள்கையை எழுதுவது முற்றிலும் சாத்தியம் மற்றும் அது நாட்டிற்கு சேவை செய்யும். கொள்கையின் நீண்டகால இருப்பினை உறுதி செய்ய இலக்குகள் போதுமானவையாகும். கொள்கையின் நோக்கங்கள் என்பது கொள்கையில் உள்ள எழுதப்பட்ட வழிகாட்டுதல் ஆகும், இது கொள்கையை கடைப்பிடிக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வாசகருக்கு உதவுகிறது. இந்த எழுதப்பட்ட வழிகாட்டுதல் மிகவும் நன்றாகவும், சந்தேகத்திற்கு இடமின்றியும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

**கொள்கைக் கோட்பாடுகள்:** கொள்கை ஒன்று இருப்பதற்கான காரணங்களாக கொள்கைக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு கொள்கை ஒரு நோக்கத்திற்காக இருக்கின்றது, மேலும் இது அடிப்படைக் கொள்கைகளின் வடிவத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. அரசாங்கம் ஏன் கொள்கையை வெளியிடுகிறது மற்றும் அதன் எதிர்பார்ப்பு விளைவு அல்லது கொள்கையின் விளைவு என்னவாக இருக்க வேண்டும் என்பதை கொள்கை கோட்பாடுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. கொள்கைக் கோட்பாடுகள் ஒத்துழைப்பு அல்லது மூலோபாயத் திட்டங்களில் உள்ள தூர நோக்கு சிந்தனைகளுக்குச் சமமானவையாகும்.

**கொள்கை அறிக்கைகள் :** கொள்கை அறிக்கைகள் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பான முக்கிய கூற்றுக்களாகும். கொள்கை அறிக்கைகள் மூலம், கொள்கையின் நோக்கம் எளிமையான மற்றும் சுருக்கமான கூற்றுக்களின் வடிவத்தில் கூறப்பட்டுள்ளன. எனவே, கொள்கை அறிக்கைகள் ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது தலைப்புகளில் நேரடியான அறிக்கை அல்லது பிரகடனத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கொள்கை அறிக்கைகள் தொடர்ச்சியாக திருத்தங்களுக்கு உட்படுத்தப்படாமல் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து இருப்பனவாகும். அதே நேரத்தில், எதிர்காலத்தில் எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு நெகிழ்வுத்தன்மை மற்றும் இசைவுபடுத்தலை அனுமதிக்கும் அளவுக்கு அவை பொதுவானவை. பொதுவாக, கொள்கை அறிக்கைகள் எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிருவகிக்கின்றன அல்லது வழிகாட்டுகின்றன. கொள்கை அறிக்கைகள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றன, அது எப்படி செய்யப்படும் என்பதை அல்ல. கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் கொள்கை அறிக்கைகள் மிகத் தெளிவான வேறுபாட்டைக் கொண்டுள்ளன. கொள்கை கோட்பாடுகள் வலுவான விஞ்ஞானரீதியான ஆதாரம் அல்லது தரவு இல்லாவிட்டாலும், செயல் அல்லது சிந்தனையின் ''அடிப்படை அல்லது நம்பிக்கைகள்'' ஆகும். இந்தக் கொள்கைக் கோட்பாடுகளில் ''நம்பிக்கை'' கொண்ட பின்னர், கொள்கை வகுப்பாளர்கள் தாங்கள் எதைத் தொடர வேண்டும் என உறுதியளிக்கிறார்கள்

என்பதை “குறிப்பிடுகிறார்கள்”. எனவே, கொள்கை அறிக்கைகள் “தாங்கள் விரும்புவது இதுதான் என்று பார்வையாளர்களுக்கு அறிவிக்கும் தெளிவான செய்திகளாக” மாறுகின்றன.

**பகுதி ஆ:**

**சாகச சுற்றுலா:** ஒரு குறிப்பிட்ட அளவிலான ஆபத்துடன் (உண்மையான அல்லது உணரப்பட்ட) ஆய்வு நோக்கப் பயணம் அல்லது சாதாரண பயணத்தை உள்ளடக்கிய முக்கிய சுற்றுலா வகை, மேலும் இதற்கு சிறப்பு திறன்கள் மற்றும் உடல் உறுதி தேவைப்படலாம்.

**பயணிகள் கப்பல் பயண சுற்றுலா :** உல்லாசப் பயணம் அல்லது விளையாட்டு நோக்கங்களுக்காகப் பயணம் செய்யும் ஒரு வடிவம், அதில் பயணக் கப்பலில் அனைத்து உள்ளடக்கிய விடுமுறையும் அடங்கும்.

**சமூக அடிப்படையிலான சுற்றுலா :** சுற்றுலாத் தலங்களில் வசிக்கும் உள்ளூர் மக்களின் சுற்றுலா பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடனான சுற்றுலா.

**சுற்றுச்சூழல் சுற்றுலா:** இயற்கையை ரசிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், கொண்டாடுவதற்கும் சுற்றுச்சூழலுடன் இணைந்த பயணம் மற்றும் சென்று பார்த்தல், இயற்கையை (மற்றும் அதனுடன் இணைந்த எந்த கலாச்சார அம்சங்களையும் - கடந்த கால மற்றும் நிகழ்காலம்), இது பாதுகாக்கப்படுவதை ஊக்குவிக்கிறது, குறைந்த பார்வையாளர்கள் வருகைதரும் பாதிப்பு ஏற்படுத்துகிறது. உள்ளூர் மக்களின் காத்திரமான சமூக-பொருளாதார ஈடுபாட்டினைக் காட்டுகின்றது.

HEQ: HEQ - திட்டமிடல் கட்டமைப்பானது திட்டமிடுபவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களுக்கு தங்கள் திட்டங்களுக்கு நிலைபேறான கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான அணுகுமுறையை வழங்குகிறது. அக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் பிரதேசத்தின் மற்ற பிரதேசங்களுடன் மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமித்த தன்மையினை உறுதி செய்தல்.
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தியின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துதல்.
- உள்ளூர் சமூக வாழ்க்கையை மேம்படுத்தலும் பொருளாதாரரீதியான செயற்பாட்டை வலுப்படுத்தலும்.

**உள்ளடக்கச் சுற்றுலா :** சுற்றுலாவின் நெறிமுறை உற்பத்தி அல்லது நுகர்வு மற்றும் அதன் பலன்களைப் பகிர்ந்துகொள்வதில் விளிம்புநிலைக் குழுக்கள் ஈடுபட்டுள்ள உருமாற்றச் சுற்றுலா.

**MICE :** கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) என்பது ஒரு வகையான சுற்றுலா ஆகும், இதில் பொதுவாக முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பெரிய குழுக்கள் ஒன்றாகக் கொண்டு வரப்படுகின்றன. 80 களில் உருவான MICE தொழில் கடந்த 40 ஆண்டுகளில் பல்வேறு வடிவங்களை எடுத்து இப்போது “டெஸ்டினேஷன் ஈவென்ட் இண்டஸ்ட்ரி” (சுற்றுலாத்தல நிகழ்வுச் தொழில்) என்று அழைக்கப்படுகிறது. சுற்றுலாத்தல நிகழ்வுத் தொழில் கீழ் இந்த இணைப்பிரிவில் பின்வருவன அடங்கும் :

- கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் சார்ந்த தொழில் (கூட்டங்கள், மாநாடுகள், கண்காட்சிகள், பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவை.)
- வர்த்தக கண்காட்சி மற்றும் கண்காட்சி தொழில்
- வர்த்தக நிகழ்வு (தயாரிப்பு வெளியீடுகள், வர்த்தக மன்றங்கள் போன்றவை)
- தனிப்பட்ட நிகழ்வு (சுற்றுலாத்தலத் திருமணங்கள், கொண்டாட்ட நிகழ்வுகள் போன்றவை)

- பொழுதுபோக்கு நிகழ்வு (பெஷன் நிகழ்வுகள், விளையாட்டு போட்டிகள், களியாட்டங்கள்)
- விளையாட்டு நிகழ்வு (SAARC விளையாட்டுகள், நீச்சல், ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்தர விளையாட்டுக்கள், படகோட்டம் நிகழ்வுகள் போன்றவை).
- கலாச்சார மற்றும் மத நிகழ்வு

**கடல்சார் சுற்றுலா** : கடல் சுற்றுலா அம்சங்களான படகோட்டம், வள்ள ஓட்டம், கப்பல் பயணம் மற்றும் உள் நீச்சல˙, மற்றும் ஜெட் பனிச்சறுக்கு , படகுக் காட்சிகள˙, துறைமுகப் பயணங்கள் மற்றும் கடல் பாரம்பரிய இடங்கள் போன்ற கடலோர நீர் விளையாட்டுகளையும் உள்ளடக்கியது.

**தொற்றுநோய்:** ஒரு தொற்றுநோய் “உலகளவில் ஒரு புதிய நோயின் பரவல்” என வரையறுக்கப்படுகிறது

**கொள்கையில் நிலைத்திருத்தல்** : காலப்போக்கில் அரசாங்கக் கொள்கைகள் எந்தளவிற்கு நிலையானதாகவும் உறுதியானதாகவும் இருக்கிறது என்பது தொடர்பானது. இது ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்குகளை சீராக அடைந்து கொள்ள உதவுகிறது.

**நிலைபேறான சுற்றுலா** : நிலைபேறான சுற்றுலா அபிவிருத்திக்கு தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது, அத்துடன் பரந்தளவிலான பங்கேற்பு மற்றும் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு வலுவான அரசியல் தலைமை அவசியமாகும். நிலைபேறான சுற்றுலாவை அடைவது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், மேலும் இது பாதிப்புகள் தொடர்பான தொடர் கண்காணிப்பு மற்றும் தேவைப்படுமிடத்து தடுப்பு அத்துடன் / அல்லது திருத்த நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)** : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் என்பது “அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலைபேறான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடமாக” வடிவமைக்கப்பட்ட 17 ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய இலக்குகளின் தொகுப்பாகும். நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் உருவாக்கப்பட்டது அத்துடன் 2030 ஆம் ஆண்டளவில் அவை அடையப்பட வேண்டும்.

**சுற்றுலா பயணி** : பார்ப்பதற்காக வரும் ஒருவர் (உள்நாட்டு, உள்வரும் அல்லது வெளிச்செல்லும்) ஒரு சுற்றுலாப் பயணி (அல்லது ஒரே இரவில் பார்ப்பதற்காக வரும் ஒருவர்) என வகைப்படுத்தப்படுவார், இல்லையெனில். அவருடைய / அவளுடைய பயணம் ஒரு இரவில் தங்குவதை உள்ளடக்கியிருந்தால் அல்லது அதே நாள் பார்ப்பதற்காக வரும் ஒருவர் (அல்லது உல்லாசப் பயணம் செய்பவர்).

**பார்ப்பதற்காக வரும் ஒருவர்** : பார்ப்பதற்காக வரும் ஒருவர் என்பது ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு, ஒரு நிறுவனத்தால் பணியமர்த்தப்படுபவரைத் தவிர்ந்த, எந்தவொரு முக்கிய நோக்கத்திற்காகவும் (வணிகம், ஓய்வு அல்லது தனிப்பட்ட நோக்கத்திற்காக) தனது வழக்கமான சூழலுக்கு வெளியே ஒரு முக்கிய இடத்திற்கு பயணம் மேற்கொள்பவர். நாடு அல்லது பார்வையிட்ட இடத்தில். பார்ப்பதற்காக வரும் ஒருவர் (உள்நாட்டில், உள்வரும் அல்லது வெளியூர் செல்லும்) இல்லையெனில், ஒரு சுற்றுலாப் பயணியாக (அல்லது ஒரே இரவில் பார்ப்பதற்காக வரும் ஒருவர்) வகைப்படுத்தப்படுவார், அவருடைய / அவளுடைய பயணத்தில் ஒரே இரவில் தங்குவது அல்லது அதே நாள் பார்ப்பதற்காக (அல்லது உல்லாசப் பயணம்) வரும் ஒருவா.

**பயனாளர் உருவாக்கிய உள்ளடக்கம்:** சமூக ஊடகங்கள் போன்ற ஒன்லைன் தளங்களில் பயனாளர்களினால் இடுகையிடப்பட்ட படங்கள், காணொளிகள், உரை மற்றும் குரல் பதிவு போன்ற எந்த வகையான உள்ளடக்கமும் எனப் பொருட்படும்.

**ஆரோக்கிய சுற்றுலா :** ஒருவரின் தனிப்பட்ட நல்வாழ்வை பராமரிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படும் பயணம் இதுவாகும்.

**இணைப்பு 2 : சுருக்கெழுத்துகளின் பட்டியல்**

SDG - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

SLCB - இலங்கை மாநாட்டு பணியகம்.

SLITHM - இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

SLTPB - இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்

SLTDA - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**இணைப்பு 3 : தொடர்புடைய கொள்கைகள் மற்றும் சட்டங்களின் பட்டியல்**

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டம்
குடியியல் வான்செலவுச் சட்டம்

இலங்கையின் தேசிய காலநிலை மாற்றக் கொள்கை

தேசிய கலாச்சாரக் கொள்கை (வரைவு)

தேசிய வனக் கொள்கை

தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கை

தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை

சுற்றலாத்துறக்கான தூய்மைத் தயாரிப்பு மீதான தேசியக் கொள்கையும் மூலோபாயமும்.

தேசிய அனர்த்த முகாமைத்துவக கொள்கை

சிறிய நடுத்தர தொழில் (SME) அபிவிருத்திக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு

நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திக்கான தேசிய கொள்கை

இலங்கையின் போக்குவரத்திற்கான தேசிய கொள்கை

வனசீவராசிகளுக்கான தேசியக் கொள்கை

**இணைப்பு 4 : கொள்கை கருப்பொருட்களும் மூலோபாயங்களும்**

அட்டவணை 1 - கொள்கை கருப்பொருள்கள் மற்றும் தொடர்புடைய தந்திரோபாயத் தொகுப்பு (உருமாற்றத்தின் மாற்ற இயக்கிகள்)

| **ஒருங்கிணைந்த நிருவாகம்** | **உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியும்** | **மேம்படுத்தப்பட்ட சேவை தரநிலைகள், காத்திரமான இணைப்பு மற்றும் தகவலறிந்த பங்குதாரர்கள்** | **புதிய சுற்றுலாத்தல மேம்பாடு, வசதியான கட்டடங்கள் மற்றும் ஊக்கமளித்தல் உத்திகள்** |
|---|---|---|---|
| - துறையின் பெரும்பாக ஆளுகையில் சீர்திருத்தம்<br><br>- துறையின் உப தேசிய நிருவாகத்தை மறுசீரமைத்தல்<br><br>- பாரா-பொது மக்கள் நிறுவனங்களை காத்திரமான மற்றும் பொருத்தமானதாக வகையில் மறுசீரமைத்தல்<br><br>- நெருக்கடி முகாமைத்துவ அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்துதல்.<br><br>- தனியார் துறை பிரதிநிதித்துவத்தினையும் துறையில் அதன் பங்கினையும் மறுசீரமைத்தல் | - நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சுற்றுலாவுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை ஒத்திசைவானதாக்குதல்<br><br>- இயற்கையான, கலாச்சார மற்றும் ஏனைய சுற்றுலா சொத்துக்களின் நிலைபேறான பயன்பாடும் பாதுகாப்பும்<br><br>- மக்களை மையமாகக் கொண்ட, உள்ளூர் வள அடிப்படையிலான மேம்பாட்டிற்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு வழிகாட்டும் தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை உருவாக்குதல், சுற்றுலா நன்மைகளின் நியாயமான விநியோகத்திற்காக மதிப்பினை அதிகரித்தல்<br><br>- நிலைபேறான தன்மை சான்றுப்படுத்தலுக்காக ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளை உருவாக்குதல் | - தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல் முகாமைத்துவ செயல்முறைக்கான அணுகலை மேம்படுத்துதல்<br><br>- சுற்றுலா அபிவிருத்திக்கான தேசிய உத்திகளின் மீளாய்வு<br><br>- சந்தைப்படுத்தல் தத்துவத்தை மீள் உத்தியாக மாற்றுதல்<br><br>- நவீன தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுலாத் துறையின் இணைப்பை மேம்படுத்துதல்.<br><br>- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுலா தலம் சார்ந்த திறன்களை மேம்படுத்துதல் | - இலங்கையில் இயற்கை மற்றும் சமூக கலாச்சார பாரம்பரியத்தை ஈர்ப்பதன் மூலம் புதிய சுற்றுலா தலங்கள் மற்றும் தயாரிப்புகளை அபிவிருத்தி செய்தல்.<br><br>- வர்த்தக சூழலின் போட்டி நிலையை மேம்படுத்துதல்<br><br>- நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலா வளர்ச்சிக்கான ஊக்கம்.<br><br>- பார்வையாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் உட்பட பார்வையாளர் அனுபவத்தை மாற்றுதல்.<br><br>- சந்தை நுண்ணறிவு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | - சுற்றுலா முதலீடு மற்றும் அபிவிருத்திக்கான சாதகமான வர்த்தக சூழலை உறுதி செய்தல். | | |

**கொள்கை கருப்பொருள் 1 - ஒருங்கிணைந்த நிருவாகம்**

| |
|---|
| **கொள்கை அறிக்கை :** |
| **போட்டித் தன்மையுடனான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் மறக்கமுடியாத சுற்றுலா அனுபவங்களை வழங்குவதற்காக சுற்றுலா அபிவிருத்தியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிருவாக திறனை உறுதி செய்வதில் உள்ளக-அரசுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படும்.** |

**மூலோபாயம் 1.1 : துறையின் பெரும்பாக ஆளுகையில் சீர்திருத்தம்**

ஜனாதிபதி அலுவலகத்தில் புதிதாக நிறுவப்பட்ட அமைச்சுக்களுக்கிடையேயான சுற்றுலா வழிகாட்டல் குழு (ITSC) அமைச்சு மட்டத்தில் உள்ள தொடர்பை வலுப்படுத்துவதோடு, சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய கொள்கைகளை சீரமைக்க உதவுகிறது (உதாரணமாக: வனவிலங்கு, தொல்பொருள், கலாச்சாரம்) என்பதோடு அமைச்சுக்கள் முழுவதிலும் சுற்றுலா மூலோபாய திட்டங்களை செயல்படுத்த உதவுகின்றது. ITSC இன் பிரதிநிதிகளைக் கொண்ட கருப்பொருள் செயலணிகளை உருவாக்குதல் (காத்திரமான மற்றும் வினைத்திறனான நிதிப் பயன்பாடு உட்பட) மற்றும் ஒவ்வொரு அமைச்சிலிருந்தும் சுற்றுலாப் பிரதிநிதியை நியமிப்பது, சுற்றுலா அபிவிருத்திக்கான சிறந்த ஒருங்கிணைப்புச் சூழலை உருவாக்கும், இதில் ஏற்கனவே உள்ள கொள்கைகள் / சட்டங்கள் தொடர்பாக சுற்றுலாத் தயாரிப்பு மேம்பாட்டை வழிநடத்தும் கட்டமைப்பும் அடங்கும். இத்தகைய ஒத்துழைப்பு இலங்கைக்கான சுற்றுலா குறிகாட்டிகளின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகள் பற்றிய பரநதுபட்ட உடன்பாட்டிற்கு வழிவகுக்கும்.

**மூலோபாயம் 1.2 : துறையின் உப தேசிய நிருவாகத்தை மறுசீரமைத்தல்**

மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் அதேபோன்று மாகாண சபைகளுக்கு இடையேயுமான தொடர்பை வலுப்படுத்துமாறு கொள்கை சிபார்சு செய்கின்றது. நிறுவன கட்டமைப்பின் தரப்படுத்தல் மற்றும் தேசிய-மாகாண ஒத்துழைப்புக்கு பொதுவான மாதிரியைப் பயன்படுத்துதல் மற்றும் மாகாண மைய உறவுகளை தெளிவாக வரையறுத்தல் ஆகியவை முக்கியமானவையாகும். நிருவாகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள வகிபாகங்கள் மற்றும் செயல்பாடுகளை சிறப்பாக வரையறுத்தல் மற்றும் சுற்றுலா அபிவிருத்தியில் செயல்திறனை அதிகரிக்கவும் மற்றும் மாகாண மட்ட சுற்றுலா வழிகாட்டுதல் குழுக்கள் (PTSC) போன்ற உபாயங்கள் மூலம் உள்ளூர் செயற்பாட்டாளர்களின் ஈடுபாட்டை உறுதி செய்தல். இந்த மூலோபாயம் மாகாண மட்டத்திற்கு அதிகாரப் பகிர்வுக்கான செயல்திட்டத்தையும், சுற்றுலாவுக்கான அரச-தனியார் பங்காளித்துவத்தை அபிவிருத்தி செய்வதில் மாகாண சபைகளின் துரிதமான அதிகாரப் பகிர்வு மற்றும் ஈடுபாட்டின் ஊடாக அவற்றை ஆதரிக்கும் முறையான வளப் பகிர்வு பொறிமுறையையும் எளிதாக்கும்.

**மூலோபாயம் 1.3 - பாரா-பொது மக்கள் நிறுவனங்களை காத்திரமான மற்றும் பொருத்தமானதாக வகையில் மறுசீரமைத்தல்.**

சுற்றுலாவுக்கான தேசியக் கொள்கையானது, தேசியக் கொள்கை கட்டமைப்பில் உள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும், வரவிருக்கும் தசாப்தத்தில் சுற்றுலாவை பொருளாதார அபிவிருத்தி மற்றும் பல்வகைப்படுத்துதலின் மையக் காரணியாக மாற்றுவதற்கும் முழு அரசாங்கத்திற்கும் நடவடிக்கை எடுப்பதற்கான அழைப்பாகும். இலங்கையின் சுற்றுலா சொத்துக்களை நிருவகிக்கும் பொது நிறுவனங்களுக்கு (SLTDA, SLPB, SLCB, SLITHM) போட்டித்தன்மை மற்றும் விநியோகத் திறனை உறுதி செய்வதற்காக அவற்றின் சட்ட நிலையில் மாற்றம் தேவைப்படலாம். சுற்றுலா வருமானத்தை அதிகரிக்க, தொழில்துறை தேவைகள் மற்றும் எதிர்கால சுற்றுலா வளர்ச்சியைப் பூர்த்தி செய்ய, சுற்றுலா நிறுவனங்களின் தற்போதைய அமைப்பு மற்றும் சட்ட நிலையை மீளாய்வு செய்ய இது தேவைப்படலாம். SLTDA, SLTPB, SLCB ஆகியவற்றின் ஒத்த துறைகளை "விசிட் ஸ்ரீலங்கா" நிறுவனமாக இணைப்பதன் மூலம் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவது குறித்து கொள்கை பரிந்துரைக்கிறது. இறுதியாக, பல்வேறு சுற்றுலா சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்திய சுற்றுலா கூட்டமைப்பு நிறுவப்பட வேண்டும் மற்றும் அப் பிரதிநிதிகள் 'விசிட் ஸ்ரீலங்கா" குழுவில் இருக்கத்தலும் வேண்டும். .

**மூலோபாயம் 1.4 - நெருக்கடி முகாமைத்துவ அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்துதல்.**

எதிர்பாராத ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்வதில் மத்திய அரசின் மீதான அழுத்தங்களைக் குறைப்பதற்கு சுற்றுலாத் துறைக்கான தேசியக் கொள்கை நெருக்கடி முகாமைத்துவ அமைப் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என பரிந்துரைக்கிறது. முறைசாரா துறையை முறைப்படுத்துவதற்கான நகர்வுகளையும், ஒரு கட்டமைப்பைத் திட்டமிடுதலையும் மற்றும் நெகிழ்வுத்தனமைமிக்க கருவிகளை உருவாக்குதல் போன்றவற்றில் இலங்கை ஈடுபடுவதால் மேலும் தொடர்புடையதாக இருக்கும். சாத்தியமான நிதிக் கருவிகளில் நம்பிக்கை நிதியங்கள், தாக்க நிதியங்கள், பச்சை மற்றும் நீல முறிகள் ஆகியவை அடங்கும்.

இதைக் கருத்தில் கொண்டு, எந்தவொரு நெருக்கடியையும் சமாளிக்கும் வகையில் இலங்கை சுற்றுலாத் துறையின் விருப்பங்களை மதிப்பிடுவதற்கும் கலந்துரையாடுவதற்கும் சாத்தியக்கூற்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு அமைச்சு PPP செயலணியை நியமிக்க வேண்டும் என்று கொள்கை பரிந்துரைக்கிறது.

**மூலோபாயம் 1.5 - தனியார் துறை பிரதிநிதித்துவத்தினையும் துறையில் அதன் பங்கினையும் மறுசீரமைத்தல்**

சுற்றுலாத் துறையின் உந்து சக்தி என்ற வகையில், தனியார் துறையானது இலங்கையின் நிலைப்பாடு மற்றும் வளர்ச்சி மற்றும் உள்ளடக்க நிலைபேறான தன்மையை நோக்கிய மாற்றத்தில் குறிப்பிடத்தக்க பங்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும். எனவே ஒவ்வொரு துறை மற்றும் பங்குதாரர்களின் கருத்துக்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அனைத்து தனியார் பங்குதாரர்களும் சுற்றுலா கூட்டமைப்பில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என சுற்றுலாத் துறைக்கான தேசிய கொள்கை பரிந்துரைக்கிறது. பொது அமைப்புகள், எவ்வாறாயினும், முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட/பதிவுசெய்யப்பட்ட தொழில் சங்கங்கள் மட்டுமே புதிய சுற்றுலாக் கூட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்க முடியும், இது தொழில் சார்ந்த மற்றும் சுயமாக -ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

**கொள்கை கருப்பொருள் 2 - உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தியும்**

| **கொள்கை அறிக்கை :** |
|---|
| **பொருத்தமான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலங்கையின் சுற்றுலாத் துறையின் நிலைபேறான வளர்ச்சிக்கான தரப்படுத்தலை வழங்குகின்றன, அவை உள்ளடக்க வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், பொறுப்பான நுகர்வு மற்றும் நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும், வளர்ந்து வரும் சந்தைக்கு ஏற்றவாறு உயர் மதிப்பு மற்றும் புதுமையான சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஊக்குவிப்பதில் சுற்றுலாத்துறையின் வகிபாகத்தை அறியும் அதிநவீனத்தன்மையுடன், நாட்டின் செழிப்பை உறுதி செய்கின்றது.** |

**மூலோபாயம் 2.1 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சுற்றுலாவுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை ஒத்திசைவானதாக்குதல்.**

உள்ளடக்க மற்றும் நிலைபேறான சுற்றுலாவை ஊக்குவிப்பதில் வளர்ச்சியை முகாமைத்துவம் செய்வதும் வழிநடத்துவதும் அடிப்படையானவையாகும். நிலைபேறான சுற்றலாத்தல மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக, சுற்றுலா உள்கட்டமைப்பு, வர்த்தகம் மற்றும் வசதிகளை உருவாக்குவதற்கான குறைந்தபட்ச தேவைகளை ஏற்றுக்கொள்வதற்கு, உள்ளூர் மட்டத்தில் UDA, உள்ளூர் அதிகாரிகள் மற்றும் SLTDA போன்ற நகர்ப்புற வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள முகவர்களிடையே வலுப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பைச் செய்யுமாறு சுற்றுலாவுக்கான தேசியக் கொள்கை பரிந்துரைக்கிறது. சுற்றுலா தலங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் தொடர்பானவை உட்பட்ட சுற்றுலா வலயங்களுக்குள் உள்ளடக்க அபிவிருத்தியை மேம்படுத்துதற்கான மதிப்பீடுகள் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்காக சிவில் சமூகத்தின் வலுவான பங்கேற்பு உட்பட மாகாண மட்டத்தில் HEQ திட்டங்களை (சமூக, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்காக) மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

திறன் மதிப்பீட்டுத் தரவுகளின் அடிப்படையில் பல்வேறு சுற்றுலா வலயங்களின் மறுசீரமைப்பு மற்றும் மீள்நிலைப்படுத்தல் ஆகியன முக்கிய நடவடிக்கைகளாக பரிந்துரைக்கப்படுகிறது. சுற்றுலாத்தல அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வலுவான சுற்றுச்சூழல் மற்றும் சமூக கவனமாற்றம் (கழிவு முகாமைத்துவம், கழிவுநீர் முகாமைத்துவம், புதுப்பிக்கத்தக்க சக்தி நுகர்வு கொள்கைகள்) அவசியமாகும்.

இது தவிர, தேசிய சுற்றுலாக் கொள்கையானது, மறுசீரமைக்கப்பட்ட சுற்றுலா வலயங்களில் பொறுப்பான சுற்றுலா முதலீட்டிற்கான கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார ஊக்குவிப்புகளை பரிந்துரைக்கிறது. தற்போதுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றுலாத்துறையில் அதிக காலநிலை மாற்ற ஒருங்கிணைப்புக்கான NDC பரிந்துரைகள் போன்றவற்றில் இருந்து சுற்றுலாத் துறை இலாபம் பெறலாம் அல்லது இந்தத் துறையை மேலும் நிலைபேறு உடையதாக மாற்ற, சான்றிதழ் திட்டம் உள்ளிட்ட விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை நிறுவலாம். பொது மற்றும் தனியார் பங்குதாரர்கள் தங்கள் நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளில் அதிக பொறுப்புடன் செயல்படுவதற்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கைக்கு (திருத்தப்பட்ட 2021) இலங்கையின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள், சுற்றுலாத் துறைக்கான தணிப்பு மற்றும் தழுவல் நடவடிக்கைகளை வெளிப்படையாக கோடிட்டுக் காட்டுகிறது. புதுப்பிக்கத்தக்க சக்தியின் அதிகரித்த நுகர்வு, சிறந்த கட்டிடங்கள், சிறந்த பயணத் திட்டமிடலுக்கான துல்லியமான பருவகால முன்னறிவிப்புகள் மற்றும் கடல் மட்ட உயர்வு மற்றும் அதிக வெப்பநிலைக்கு எதிரான பாதுகாப்பு ஆகியவை இதில் அடங்கும். இவை எதிர்காலத்தில் தேசிய மற்றும் மாகாண சுற்றுலா உபாயங்கள் மற்றும் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

**மூலோபாயம் 2.2 - இயற்கையான , கலாச்சார மற்றும் ஏனைய சுற்றுலா சொத்துக்களின் நிலைபேறான பயன்பாடும் பாதுகாப்பும்**

இலங்கையின் வளமான கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை நீண்டகாலத்திற்கு பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக, அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் ஐ.நா. முகவர் நிலையங்கள், பாரம்பரிய பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய வலையமைப்புகள் மற்றும் மாநாடுகளில் அதிகமாக பங்குபற்றவும், அதன் செயல்பாட்டை மேம்படுத்தவும் ஊக்குவிக்கப்படுகின்றன. தற்போதுள்ள தலங்கள், மற்றும் நல்ல சுற்றுலா நடைமுறைகளுக்கு ஆதரவாக, இலங்கையில் இயற்கை மற்றும் கலாச்சார தலங்களை அடையாளம் காணுதல், நிறுவுதல் மற்றும் அறிவியல் அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துதல். சர்வதேச நடைமுறைகள் மற்றும் போக்குகளுக்கு ஏற்ப கலாச்சார தலங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் (கடல் மற்றும் நிலப்பரப்பு) ஆகியவற்றிற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துவதற்கு இது உதவும். மிகவும் பலவீனமான தலங்களுக்கு, ஏற்கனவே சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளது, ஏற்றிச் செல்லும் திறன் மற்றும் சுற்றுலா வாகனங்களுக்கான குறைந்தபட்ச தரநிலைகள் (இரைச்சல் மற்றும் கார்பன் உமிழ்வு அளவுகள்) மற்றும் கூருணர்வு மிக்க பகுதிகளில் உள்ள ஏனைய சுற்றுலா உள்கட்டமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் வரம்புகளை நிறுவுவதற்கு திறன் மதிப்பீடுகள் அவசரமாக தேவை.

**மூலோபாயம் 2.3 - மக்களை மையமாகக் கொண்ட , உள்ளூர் வள அடிப்படையிலான மேம்பாட்டிற்கான தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு வழிகாட்டும் தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை உருவாக்குதல், சுற்றுலா நன்மைகளின் நியாயமான விநியோகத்திற்காக மதிப்பினை அதிகரித்தல்**

தேசிய சுற்றுலாக் கொள்கையானது, முறையான பிரதிநிதித்துவம் மற்றும் பயனுள்ள ஒழுங்குமுறையை உறுதிப்படுத்த சுற்றுலாப் பிரிவுகள் மற்றும் துணைத் துறைகளின் விரிவான அமைப்பைப் பரிந்துரைக்கிறது. உள்ளூர் மக்களுக்கு (சமூக அடிப்படையிலான சுற்றுலா, ஆரோக்கியம், மாநாடுகள் மற்றும் கூட்டங்கள், சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா , கடல் சுற்றுலா மற்றும் கப்பல் சுற்றுலா) மற்றும் தனித்துவமான சேவைகளை வழங்கும் துணைத் துறைகள் (கைவினைஞர், பாரம்பரிய நடனக்காரர்கள் மற்றும் வாடகைக் கார் போன்றவை) ஆகியவற்றிற்கு பயனளிக்கக்கூடிய சுற்றுலாவின் துணைப் பிரிவுகளின் சட்டப்பூர்வ அங்கீகாரம் இதில் அடங்கும். முறைசாரா துறைக்கான பாதுகாப்புகள் நிறுவப்பட வேண்டும் மற்றும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் வரி விலக்கு போன்ற துணைப் பிரிவுகளின் பதிவுகளை ஊக்குவிக்க ஊக்கத்தொகைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். எவ்வாறாயினும், நடத்தை விதிகள் உட்பட இந்த ஒவ்வொரு துணைத் துறைக்கும் வழிகாட்டுதல்கள் (தரநிலைகள் மற்றும் நெறிமுறைகள்) உருவாக்கப்பட வேண்டும். முன்னுரிமை முதலீடுகள் (உட்கட்டமைப்பு, பயிற்சி) உள்நாட்டுப் பார்வையாளர்கள் மற்றும் ஊனமுற்ற சுற்றுலாப் பயணிகளுக்கான சேவை வழங்கல் உட்பட திறனை அதிகரிக்க பரிசீலிக்கப்பட வேண்டும் (பாகுபாடற்ற நடைமுறைகள் மற்றும் சுற்றுலா அனைவருக்கும் அணுகக்கூடியது). தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளின் சிக்கல்கள் பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களிடையேயும், சுற்றுலா விநியோகச் சங்கிலி முழுவதும் நியாயமான நிதிசார் உறவுகளை உறுதி செய்வதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**மூலோபாயம் 2.4 - நிலைபேறான தன்மை சான்றுப்படுத்தலுக்காக ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளை உருவாக்குதல்**

நிலைபேறானதன்மையும் சுற்றுச்சூழல் இயல்பும் எதிர்காலத்தில் துறை வளர்ச்சிக்கு முக்கியமாக இருக்கும். நிலைபேறானதன்மைக்கான சான்றிதழ் மிகவும் பரவலாக நடைமுறையில் இருப்பதையும், சுற்றுலா மதிப்புச் சங்கிலி முழுவதும் அணுகக்கூடியதாக இருப்பதையும் உறுதிப்படுத்த , அத்தகைய மூன்றாம் தரப்பு சான்றிதழை உள்நாட்டில் வழங்குவதற்கு ஒரு சுயாதீன அங்கீகார அமைப்பு அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது, ஆனால் இது உலகளாவிய நடைமுறைத் தரங்களின் கீழ் வருகின்றது. தேவையான ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குவது அவசரமானதாகும். இந்த சான்றிதழ் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய தரநிலைகள் அல்லது அங்கீகார அமைப்புகளுடன் சீரானதாக்கப்படல் வேண்டும்,

ஆனால் பெரிய முறைசாரா துறையினர் பங்கேற்தற்கு உள்நாட்டில் பொருத்தமானதாகவும் செலவு குறைந்ததாகவும் இருக்க வேண்டும்.

**மூலோபாயம் 2.5 - சுற்றுலா முதலீடு மற்றும் அபிவிருத்திக்கான சாதகமான வர்த்தக சூழலை உறுதி செய்தல்.**

சுற்றுலா முதலீடு மற்றும் மேம்பாட்டிற்கான சாதகமான வர்த்தக சூழலை உருவாக்குவது தொழில்துறையின் வளர்ச்சிக்கும் நிலைபேறான தன்மைக்கும் முக்கியமானதாகும். ஒழுங்குபடுத்துதல் செயல்முறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதிக முதலீட்டாளர்களை ஈர்க்கவும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், அதிகாரத்துவ சிவப்பு நாடாவை குறைக்கவும் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மிகவும் திறமையான மற்றும் வெளிப்படையான ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்கவும் உதவும். சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் நிதிக்கான அணுகல் ஒரு முக்கியமான காரணியாகும். மூலதனம், கடன் மற்றும் முதலீட்டு ஊக்கத்தொகைக்கான அணுகலை உள்ளடக்கிய சாதகமான நிதிச் சூழலை உருவாக்குவது அதிக முதலீட்டாளர்களை ஈர்க்க உதவும். பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களின் மூலம் மனித மூலதனத்தை மேம்படுத்துவதன் மூலம் திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல் சுற்றுலாத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறந்த பணியாளர்களை உருவாக்க உதவும். விருந்தோம்பல் , வாடிக்கையாளர் சேவை, மொழி புலமை போன்ற துறைகளில் பயிற்சி இவற்றுள் அடங்கும்.

**கொள்கை கருப்பொருள் 3 - மேம்படுத்தப்பட்ட சேவை தரநிலைகள், காத்திரமான இணைப்பு மற்றும் தகவலறிந்த பங்குதாரர்கள்**

| **கொள்கை அறிக்கை :** |
|---|
| **இலங்கை சுற்றுலாவின் டிஜிட்டல் மாற்றத்தை உறுதிசெய்வதன் மூலம், சுற்றுலா பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் தொழில்துறையின் கண்டுபிடிப்பு திறனை விரிவுபடுத்துதல், திறந்த புதிதான உட்கட்டமைப்பு அல்லது உள்ளூர் புதுமைகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளை எளிதாக்குதலும் முதலீடுகளை ஊக்குவித்தலும்** |

**மூலோபாயம் 3.1 - தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல் முகாமைத்துவ செயல்முறைக்கான அணுகலை மேம்படுத்துதல்.**

உலகளாவிய சுற்றுலா சந்தையில் இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிக்க, தயாரிப்பு அபிவிருத்தி வேகமாக இருத்தல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக, சுற்றுலாக் கொள்கையானது, சந்தைப் பிரிவுகள் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் தரவு சேகரிப்பு மற்றும் உற்பத்தி செயல்முறையை மேம்படுத்துதல் உட்பட , சுற்றுலாவின் தாக்கங்களை நன்கு புரிந்து கொள்ள சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புகளை பரிந்துரைக்கிறது. SLTDA ஆராய்ச்சி மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவின் செயல்பாட்டை சீர்திருத்தம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது, இது போன்ற தரவுகள் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு முன்தேவையான விரிவான தகவல் முகாமைத்துவம் செயல்முறையை அணுகுவதற்கு தரவுக்கான அணுகல் மற்றும் தகவல் உற்பத்திக்கு SLTDA மற்றும் தனியார் துறைக்கு இடையே தரவு பகிர்வு நெறிமுறை தேவைப்படுகிறது. அத்தகைய நெறிமுறை சுற்றுலா கூட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழகங்களை MOUகள் மூலம் ஈடுபடுத்த முடியும். இது தவிர , பல நாடுகளில் இருந்து வரும் பயணிகள் விசா வந்திறங்குகையில் (visa on-arrival) வசதியைப் பெற வேண்டும்.

பார்ப்பதற்காக வருபவர்கள் பொருத்தமான விசாவிற்கு விண்ணப்பிப்பதை உறுதி செய்வதற்காக, அனைத்து வகைகளிலும் (சுற்றுலா, வியாபாரம், போன்றவை) விசா விலைகள் சீரமைக்கப்பட வேண்டும், இதனால் வெவ்வேறு சந்தைப் பிரிவுகளை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

சுற்றுலாவுக்கான தேசியக் கொள்கையானது, தேசிய மூலோபாயத் திட்டத்துடன் தொடர்புடைய முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்) உட்பட சுற்றுலா வளர்ச்சியைக் கண்காணிக்க கண்காணிப்பு கட்டமைப்பை நிறுவுவதை ஊக்குவிக்கிறது. கொள்கை மற்றும் தொடர்புடைய உத்திகளை செயல்படுத்துவதை கண்காணிக்க தனியார் துறை உறுப்பினர்கள் உட்பட ITSC இன் துணைக் குழுவும் பரிந்துரைக்கப்படுகிறது.

**மூலோபாயம் 3.2 - சுற்றுலா அபிவிருத்திக்கான தேசிய உத்திகளின் மீளாய்வு**

சுற்றுலா மேம்பாட்டிற்கான தேசிய உத்திகளை மீளாய்வு செய்வது, முன்னேற்றகரமான பகுதிகளை அடையாளம் காணவும், சுற்றுலாத் துறையின் நிலைபேறான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் உதவும் ஒரு முக்கியமான செயல்முறையாகும். தற்போதுள்ள உத்திகளை மீளாய்வு செய்து விரிவான பகுப்பாய்வை மேற்கொணடு சுற்றுலாத் துறையில் மாற்றத்தைத் தூண்டுவதற்கு புதிய சுற்று உத்திகளை உருவாக்க வேண்டும். இந்த பகுப்பாய்வு சுற்றுலாக் கொள்கைகள் , திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் மீளாய்வு மற்றும் அவற்றின் நோக்கம் இலக்குகளை அடைவதில் இந்த உத்திகளின் செயல்திறனை மதிப்பீடு செய்வது ஆகியவை அடங்கும். மேலும், சுற்றுலாக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் தொழில் சங்கங்கள், சமூகக் குழுக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களின் ஈடுபாட்டை தற்போதைய உத்திகளின் வளர்ச்சியில் பங்குதாரர்களின் ஈடுபாட்டின் அளவை மதிப்பிடுவது முக்கியமானதாகும்.

**மூலோபாயம் 3.3 - சந்தைப்படுத்தல் தத்துவத்தை மீள் - உத்தியாக மாற்றுதல்**

இலங்கையின் சந்தைப்படுத்தல் அணுகுமுறை 'எதிர்காலத்திற்கு ஏற்றதாக' மீள் கட்டமைக்கப்பட வேண்டும். பாரம்பரிய விளம்பரத்திலிருந்து பயனர் உருவாக்கிய உள்ளடக்கம் வரை சந்தைப்படுத்தல் முன்னேற்றம், மற்றும் சந்தைப்படுத்தல் நுண்ணறிவு கருவிகள் வழங்கும் வாய்ப்புகள், அத்தகைய மாற்றத்திற்கான உத்வேகத்தை வழங்கும். இனி வரும் காலங்களில் சுற்றலாத் தலத்தின் முன்னிலைப்படுத்தல் இருக்காது, ஆனால் பார்வையிட வருபவர்கள் தமது திருப்தியையும் அதிருப்தியையும் முன்னிலைப்படுத்துவர். இதன் விளைவாக, தேசிய சுற்றுலாக் கொள்கையானது, பார்வையிட வருபவர்கள் உருவாக்கும் சமூக ஊடக உள்ளடக்கத்தை அதிக அளவில் கண்காணிப்பதன் மூலம் சுற்றுலா விநியோகத்தின் சிறந்த கட்டமைப்பை ஊக்குவிக்க முடியும். தயாரிப்பு மேம்பாடு பார்வையிட வருபவர்ககளின் பின்னூட்டம் மூலம் தொடர்ந்து தெரிவிக்கப்பட வேண்டும் அத்துடன் சுற்றுலாத் துறையானது மாற்றத்தை உள்வாங்கும் அளவுக்கு சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சுற்றுலா அனுபவம் தொடர்ச்சியானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் உள்நாட்டு சந்தைகளில் (உள்நாட்டு சுற்றுலாவுக்கான தேசிய மூலோபாயத்தை உருவாக்குதல்) வலுவான கவனம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட மற்றும் பிரத்தியேகமான பிரிவுகள் முக்கிய சந்தைகள் மூலம் தெரிவிக்கப்படும் தங்கள் சொந்த பின்னூட்டத்தை கொண்டிருக்க வேண்டும் (உதாரணமாக சுற்றுலாத்தல MICE தயாரிப்புகளை விளம்பரப்படுத்த MICE பணிக்குழுவை நிறுவுதல்). இலங்கையின் வேறுபாடு மற்றும் ஊக்குவிப்பு தொடர்பாக, தகவல்களைப் பகிர்வதில் சீரான தன்மையைப் பேணுவதற்கும், விளம்பர பிரச்சாரங்களை சீரமைக்கவும். குறிப்பிட்ட சந்தைப் பிரிவுகளில் (MICE, ஆரோக்கியம், போன்றவை) ஊக்குவிப்பதில் தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் SLTDA மற்றும் மாகாண சபைகளுக்கு இடையில் வர்த்தக பெயரை தரப்படுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது.

**மூலோபாயம் 3.4 - நவீன தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுலாத் துறையின் இணைப்பை மேம்படுத்துதல்.**

டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் புத்தாக்கம் ஆகியவை சுற்றுலாத் துறையில் பெருமளவில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இலங்கையில் நவீன தொழிநுட்பத்தின் ஊடாக சுற்றுலாத் துறையின் இணைப்பை மேம்படுத்துவதற்கு, தேசிய சுற்றுலாக் கொள்கையின் ஒரு பகுதியான உத்திகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சுற்றுலாப் பயணிகள், ஹோட்டல் உரிமையாளர்கள், பயண முகவர்கள், போக்குவரத்து வழங்குநர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் உட்பட சுற்றுலாத் துறையின் அனைத்து பங்குதாரர்களையும் இணைக்கும் ஒரு விரிவான டிஜிட்டல் தளத்தை உருவாக்கவும், குறித்த தளமானது நிகழ்நேர தகவலை வழங்குவதோடு, இணையவழி முன்பதிவுகள் மற்றும் கட்டணங்களை செயற்டுத்தி, சுற்றுலாப் பயணிகளுக்கு தடையற்ற மற்றும் ஒருங்கிணைந்த அனுபவத்தை உருவாக்க வேண்டும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல்களை பெறக்கூடிய வகையில் டிஜிட்டல் தளங்களின் அணுகலை அதிகரிப்பது, அவர்களின் பயணத்திட்டங்கள், தங்குமிடங்களை முன்பதிவு செய்யவும் மற்றும் செயல்பாடுகளை முன்கூட்டியே திட்டமிடவும் உதவுகிறது. குறித்த தளமானது உள்ளூர் கலாச்சாரம், பாரம்பரிய மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பயணத் திட்டங்களை உருவாக்க உதவும் இடங்கள் பற்றிய தகவல்களையும் வழங்க வேண்டும். மேலும், சேவைகளுக்கான உடனடி அணுகலை வழங்கும், முன்பதிவுகள் மற்றும் கட்டணங்களை செலுத்தக்கூடிய வகையில் மொபைல் செயலிகளை உருவாக்குவதும் அவசியமாகும்.

**மூலோபாயம் 3.5 - உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுலா தலம் சார்ந்த திறன்களை மேம்படுத்துதல்**

உள்ளூர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, இயற்கை வளங்கள், கலாச்சார பாரம்பரியம் மற்றும் பாரம்பரிய ஆற்றல்கள் உள்ளிட்ட உள்ளூர் வளங்களின் விரிவான பட்டியலை பேணுதல் வேண்டும் மற்றும் சுற்றுலாத் துறையின் நலனுக்காக அவற்றைப் பயன்படுத்துவதற்கான உத்திகளை உருவாக்க வேண்டும். பின்னர், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், தொழில் முனைவோரை வளர்க்கவும், தொழில்துறையின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிராந்தியத்தின் தேவைகளுக்கும் ஏற்றவாறு சுற்றுலாத் தலம் சார்ந்த திறன் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்தல். விருந்தோம்பல், வாடிக்கையாளர் சேவை மற்றும் மொழி புலமை போன்ற சுற்றுலா தொடர்பான திறன்களில் உள்ளூர்வாசிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இந்த திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். திறன் திட்டங்கள் உள்ளூர் வளங்கள் மற்றும் சமூகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், மேலும் சுற்றுலாத் துறையில் தேவைப்படும் திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்புக்காக தனிநபர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தும் தொழில்முனைவோர் திறன் திட்டங்களை உருவாக்குதல். வர்த்தக முகாமைத்துவம், நிதி பெறல் மற்றும் சந்தைப்படுத்தல் உதவி ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதன் மூலம் உள்ளூர் தொழில்முனைவோருக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், மிகவும் நிலைபேறான சுற்றுலா மற்றும் மனித வள மூலோபாயத்தில் சீர்திருத்தத்தை வழங்குவதன் மூலம் இலங்கைக்கான சுற்றுலாத் தயாரிப்புகளின் தரத்தை மாற்றியமைப்பது அவசரமும் அவசியமுமாகும். பயிற்சியினை பெறுதல் மற்றும் தரப்படுத்தலை மேம்படுத்துவது இலங்கை முழுவதும் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த சுற்றுலாத் துறைக்கு முக்கியமானதாகும். அந்த நோக்கத்திற்காக, தற்போதைய பயிற்சி நிறுவனங்கள், SLITHM அல்லது சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தரங்களின்படி, வழிகாட்டுதல் / அங்கீகரித்தல் செயல்முறை மூலம் தங்கள் உரிமங்கள், செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தி தரப்படுத்த வேண்டும் என கொள்கை பரிந்துரைக்கிறது.

**கொள்கை கருப்பொருள் 4 - புதிய சுற்றுலாத்தல மேம்பாடு, வசதியான கட்டடங்கள் மற்றும் ஊக்கமளித்தல் உத்திகள்**

| **கொள்கை அறிக்கை :** |
|---|
| **சந்தை சூழலை சீர்திருத்துவதன் மூலம், சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்தி, தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் விவேகமான பயணங்களின் உதவியுடன், தொழில்துறையின் நெகிழ்ச்சித்தன்மையை உறுதிசெய்து, அதிகரித்து வரும் சுற்றுலாத் தேவை நுட்பத்துடன் இலங்கை சுற்றுலாவின் சரியான நிலைப்பாட்டை உறுதி செய்தல்.** |

**மூலோபாயம் 4.1 - இலங்கையில் இயற்கை மற்றும் சமூக கலாச்சார பாரம்பரியத்தை ஈர்ப்பதன் மூலம் புதிய சுற்றுலா தலங்கள் மற்றும் தயாரிப்புகளை அபிவிருத்தி செய்தல்.**

தளங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் பார்வையாளர்கள் இணைந்திருப்பதற்கு ஏதுவாக புதிய சுற்றுலா தலங்கள் மற்றும் தயாரிப்புகளை உருவாக்குவது அவசியமாகும். கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் இடங்களின் இணைப்பு (உதாரணமாக: விமானம், பேருந்து மற்றும் வாடகை வாகனங்கள் போன்ற போக்குவரத்து முறைகளுக்கு இடையே சிறந்த இணைப்பை உறுதி செய்தல்) இதை அனைவரும் பெற்றுக்கொள்ளகூடியதாகவும் பாதுகாப்பானதாகவும் மாறுகின்றது, மேலும் தளங்கள் மற்றும் தயாரிப்புகளை அதாவது இலத்திரனியல் அனுமதிச் சீட்டு போன்றவை மேம்படுத்தப்பட்ட இணையத்தள சேவைகள் மூலம் எளிதாக கிடைப்பதை உறுதி செய்கிறது.

**மூலோபாயம் 4.2 - வர்த்தக சூழலின் போட்டி நிலையை மேம்படுத்துதல்**

ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பல காரணிகள் தொழில்துறையின் போட்டித்தன்மையை பாதிக்கின்றன. ஏற்றுமதித் தொழிலாக சுற்றுலாவை அங்கீகரிப்பது முக்கியமானது. இது தவிர, வரி மோசடி மற்றும் தவிர்ப்பு, மற்றும் தங்குமிட வகைப்பாட்டு முறை சீர்திருத்தம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான தீர்வுகள் உட்பட, துறைகள் முழுவதும் அதிக கொள்கை நிலைபேறாதன்மைக்கு பரிந்துரைப்பது தனியார் துறையை அதிக போட்டித்தன்மையுடன் மாற்ற வழிவகுக்கும். வகைப்பாடு மற்றும் லேபிள்கள் தனிப்பட்ட வியாபாரங்கள் மற்றும் அவர்களின் சலுகையின் தரத்தை மேம்படுத்த விரும்பும் இடங்களுக்கு காத்திரமான சந்தைப்படுத்தல் தலங்களை வழங்க முடியும். இந்தக் கண்ணோட்டத்தில், சுற்றுலாக் கொள்கையானது, வகைப்படுத்தல் முறை மற்றும் அதை ஏற்றுக்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் பற்றிய வழக்கமான மீளாய்வுகள், வேகமாக வளர்ந்து வரும் நுகர்வோர் தேவைகள், குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் கிடைக்கும்தன்மை என்பன இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்க வேண்டுமென அறிவுறுத்துகிறது.

அந்த கண்ணோட்டத்தில், சுற்றுலா பங்குதாரர்களை கணக்காய்வு செய்வதற்கு ஒரு சுயாதீன கணக்காய்வு நிறுவனம் நியமிக்கப்பட முடியும். தேசிய சுற்றுலாக் கொள்கையானது தொழிலாளர் சட்டங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விசாக் கொள்கைகளில் சீர்திருத்தத்தையும் பரிந்துரைக்கிறது. வரி ஏய்ப்பைத் தடுக்கவும் தவிர்க்கவும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் பணியாளர்கள் நாட்டில் செயல்படும்போது அவர்களின் நடத்தையை கடுமையாகக் கட்டுப்படுத்தி கண்காணிக்க வேண்டும். முறைசாரா பங்குதாரர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்துடன் ஒழுங்குமுறை டிஜிட்டல் மயமாக்கல் (முதலீட்டாளர்களுக்கான ஒரே அனுமதி முறை உட்பட) மற்றும் இணையவழிக் கண்காணிப்பு ஆகியவை இலங்கையில் நியாயமான வர்த்தக சூழலை அடைவதற்கான தெரிவுகளாகும்.

**மூலோபாயம் 4.3 - நிலைபேறான மற்றும் பொறுப்பான சுற்றுலா வளர்ச்சிக்கான ஊக்கம்.**

பசுமை மற்றும் உள்ளடக்க அபிவிருத்தியை மையமாக கொண்டு, இலங்கை அரசாங்கம் நிலைபேறான மற்றும் காத்திரமான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் ஆர்வமுள்ள நிறுவனங்களுக்கு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சலுகைகளை வழங்கும் என்று முன்மொழியப்பட்டது. இந்த ஊக்குவிப்புக்கள், தனியார் துறை பங்குதாரர்களை, இலங்கையில் நெகிழ்ச்சியான, சுற்றுச்சூழல் உணர்வுள்ள மற்றும் சமூக உள்ளடக்க தொழிற்துறையை கட்டியெழுப்புவதில் தீவிரமாக ஈடுபட ஊக்குவிக்கும். எதிர்கால சுற்றுலா உத்திகள், டிஜிட்டல் கண்டுபிடிப்பு மற்றும் புதிய டிஜிட்டல் பயண செயற்பாடகள் ஆகியவை நிலைபேறான தன்மையை நோக்கிய மாற்றத்தில் எவ்வாறு அதிக பங்கை வகிக்க முடியும் என்பதை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**மூலோபாயம் 4.4 - பார்வையாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் உட்பட பார்வையாளர் அனுபவத்தை மாற்றுதல்.**

பார்வையாளர்கள் சுற்றுலா தலத்திற்கு இலகுவாகச் ெல்வதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதும் அவர்களது சிரமங்களைக் குறைப்தும் அவசியமாகும். சுற்றுலா தலங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் கிடைக்கப் பெறும் தன்மை. இதில் சென்று சேருமிடத்தின் இணைப்பு (உதாரணமாக: போக்குவரத்து முறைகளுக்கு இடையே சிறந்த இணைப்பை உறுதி செய்வதற்காக போக்குவரத்துத் துறையுடன் பணிபுரிதல்) அதை அனைவருக்கும் கிடைக்கத்தக்தாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்றுவது மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகள் மூலம் தலங்கள் மற்றும் தயாரிப்புகளை எளிதாக பெறுவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

பார்வையாளர்களின் அனுபவத்துடன் தொடர்புடைய, மென்மையான மதுபானங்களை விற்பனை செய்வதற்கான பங்குதாரர்களிடையே ஒரு நிலையான கொள்கையை உருவாக்குவது முக்கியமானதாகும் - அனுமதி நடைமுறைகள் முறைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் முடிந்தவரை பரவலாக்கத்தை உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும். இந்த மூலோபாயம் பார்வையாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்தை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியமான துணை உத்தியையும் உள்ளடக்கியது, இதில் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள், குறிப்பாக ஒற்றையான / தனியான பெண் பயணிகளுக்கு, மற்றும் பாதுகாப்பான வழிகாட்டுதல் மற்றும் போக்குவரத்தை மேம்படுத்துதல். சுற்றுலாவின் புதிய வடிவங்களின் வருகை, போக்குவரத்து மற்றும் சேவைகளை வாங்குதல் ஆகியவை சுற்றுலாப் பாதுகாப்பு மற்றும் சேவை வழங்குநர்களின் நியாயமான உபசரிப்பினை உறுதிசெய்ய புதுப்பிக்கப்பட்ட விதிமுறைகள் தேவைப்படுகின்றன. அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் சாகச விளையாட்டு உபகரணங்களின் வாடகையை ஒழுங்குபடுத்துவது பார்வையாளர்களைப் பாதுகாப்பது மற்றும் கட்டாயக் காப்புறுதிகள் மற்றும் பதிவு எண்கள் மூலம் நியாயமற்ற போட்டியைக் கட்டுப்படுத்துவது ஆகியவை இதில் அடங்கும். வெளிநாட்டு பயணிகளுக்கு சர்வதேச சாரதி அனுமதிகளை (IDPs) வழங்குவதை முறைப்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

**மூலோபாயம் 4.5 - சந்தை நுண்ணறிவு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்**

சுற்றுலா குறித்த சந்தை நுண்ணறிவை மேம்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும், இலக்கு பார்வையாளர்களை அடையாளம் காண வேண்டும், அவர்கள் என்ன விரும்புகிறார்கள், அவர்கள் பயணிக்க தூண்டுவது எது, புதிய சுற்றுலாப் போக்குகள், போட்டி மற்றும் பிராந்தியத்தில் சுற்றுலாவைப் பாதிக்கக்கூடிய ஏனைய காரணிகளைப் புரிந்துகொள்ள சந்தை ஆராய்ச்சியை நடத்துதல். முக்கிய சந்தைப் பிரிவுகளைப் புரிந்துகொள்வதற்கு, தரவு பகுப்பாய்வுகளைச் சேகரித்து, உங்கள் சந்தைப்படுத்தல் உத்திகளின் செயல்திறனை அளவிடுவது, நுகர்வோர் நடத்தையைப் புரிந்துகொள்வது மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பது பரிந்துரைக்கப்படுகிறது. இது வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காணவும், முதலீட்டின் மீதான வருவாயை அதிகரிக்கவும், குறித்த சுற்றுலாத் தலத்திற்கு அதிக பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் சந்தைப்படுத்தல் உத்திகளை சரிசெய்யவும் இது உதவும்.